بسم الله الرحمن الرحيم

بد نظری (ٹمل)

# தீய பார்வையின் தீங்குகள்...!


உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்.:.பிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜூத்தீன் ஹஸனீ**



**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தீய பார்வையின் தீங்குகள்!... |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி<br>ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 85 |
| விலை | : | ரூ.35.00 |
| இரண்டாம் பதிப்பு | : | மே - 2026<br>துல் ஹிஜ்ஜா - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர்<br>ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 10 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை
(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.
செல்: 89256 11688

# பொருளடக்கம்


1. மதிப்புரை!.................................................................6
2. வாழ்த்துரை!...............................................................9
3. தீய பார்வையின் தீங்குகள்.......................................19
4. பார்வையை பாதுகாப்பது சம்பந்தமான குர்ஆனுடைய வசனங்கள்...............................................................12
5. பார்வை பாதுகாப்பு பற்றிய நபி ﷺ அவர்களுடைய பொன்மொழிகள்..........................................................15
6. திடீர் பார்வை குற்றமற்றது........................................16
7. தீய பார்வை குழப்பத்திற்கான விதையாகும்...............17
8. தீய பார்வை விபச்சாரத்தின் ஏணியாகும்......................19
9. தீய பார்வையை விட்டும் தவிர்ந்திருப்பதில் ஈமானின் சுவை.20
10. தீய பார்வை ஒருபோதும் திருப்தியைப் ஏற்படுத்தாது...21
11. தீய பார்வையினால் அமல் செய்வதற்கான வாய்ப்பு அகற்றப்பட்டு விடுகிறது..........................................25
12. தீய பார்வையினால் மனன சக்தி பலவீனமடைதல்.......26
13. தீய பார்வை இழிவு மற்றும் கேவலத்திற்கான காரணியாகும்.27
14. தீய பார்வையினால் அபிவிருத்தி அழிந்துவிடுகிறது....28
15. தீய பார்வை கொண்டவனிடம் சைத்தான் நிராசையடையாமல் இருக்கிறான்................................................................29
16. தீய பார்வையினால் நன்மைகள் அழிந்து பாவம் உறுதியாகி விடுகிறது..............................................30

17. தீய பார்வையினால் அல்லாஹ்வின் ரோஷம் பொங்கி எழுகிறது....30
18. தீய பார்வை பார்ப்பவர் சபிக்கப்பட்டவர்....31
19. தீய பார்வையை மக்கள் அற்பமாகக் கருதுகின்றனர்...32
20. தீய பார்வையிலிருந்து தீய செயல்கள் வரை....32
21. தீய பார்வையினால் உடலிலிருந்து ஒரு வகையான துர்வாடை வீசுதல்....33
22. தீய பார்வைக்கான உடனடி தண்டனை....35
23. தீய பார்வையின் காரணமாக திருக்குர்ஆன் மறந்து விடுதல்....35
24. புகைப் படங்களும், தீய பார்வையும்....36
25. தீய பார்வையும், அழகை ரசித்தல் என்ற ஏமாற்றமும்...37
26. தீய பார்வையின் பீடை....39
27. தீய பார்வையின் துயரமான முடிவு....40
28. தீய பார்வைக்கு குறிப்பிடப்படாத தண்டனை....41
29. தீய பார்வை உள்ளத்தில் ஏற்படுத்தும் பாதிப்பு....42
30. தீய பார்வையும், ஒளியற்ற முகமும்....43
31. தீய பார்வையைத் தவிர்ப்பதற்கான வெகுமதி....43
32. தீய பார்வையில் மிகுந்த எச்சரிக்கை....44
33. தீய பார்வையால் யானை கூட வழுக்கிவிழும்....46
34. தீய பார்வையின் மூன்று பெரிய தீங்குகள்....46
35. தீய பார்வை சம்பந்தமாக முன்னோர்களின் கூற்றுகள்.49
36. தீய பார்வைக்குத் தீர்வு....51

37. திருக்குர்ஆனுடைய வெளிச்சத்தில்..............................52

38. பரிசுத்தமான ஹதீஸின் வெளிச்சத்தில்........................61

39. முன்னோர்களின் கூற்றுகளின் வெளிச்சத்தில்.......63

40. தீய பார்வை ஏற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பது......67

41. சுவன மங்கையர்களின் குணங்களை கற்பனை செய்து பாருங்கள்..........................................................74

42. அல்லாஹ்வின் தரிசனம் கிடைக்காது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்...........................................77

43. உங்கள் தாயையும், மகள்களையும் கற்பனை செய்து பாருங்கள்..........................................................78

44. கண்களில் சூடு போடப்படுவதை கற்பனை செய்து பாருங்கள்79

45. அடிப்படையான, அவசியமான விஷயம்.........................79

46. உங்கள் மனதோடு விவாதம் செய்யுங்கள்...................81

47. அல்லாஹ் உடன் இருக்கிறான் என்று கவனித்தல்......82

48. ஒரு தவறான புரிதல்..................................................83

## மதிப்புரை!

பார்வை என்பதை வெறும் ஒரு புலனாக மட்டும் பார்க்காமல், அது அல்லாஹ்வின் அளப்பரிய அருளாகவும் பார்க்க வேண்டும். அருளாக வழங்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் மறுமை நாளில் விசாரணைக்கு உட்படுத்தப் படும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

அத்துடன் பார்வை என்பது மனதின் நுழைவாயில் ஆகும். கண்கள் இதயத்தின் ஜன்னல்கள் ஆகும். அந்த ஜன்னல்கள் வழியே தூய்மையான காற்று வீச வேண்டுமானால், தீய பார்வைகளைத் தவிர்ப்பது அவசியமானதாகும்.

கண்கள் வழியே நுழையும் காட்சிகள் எப்படி ஒருவரின் எண்ணங்களை உருவாக்கி, செயல்களைத் தீர்மானிக்கின்றன என்பதை சிந்தனை கொண்ட ஒவ்வொருவரும் நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

மிகக் கடினமான அல்லது சங்கடமான விஷயமாகக் கருதப்படும் பாலியல் ஒழுக்கம் மற்றும் பார்வைக் கட்டுப்பாடு குறித்து மிக நாசூக்காகவும், அதே சமயம் அழுத்தமாகவும் இந்தப் புத்தகத்தில் பல முக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இன்றைய டிஜிட்டல் உலகில், மனித மனங்களை எளிதில் திசைதிருப்பும் சவால்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. இந்தச் சூழலில், "**பார்வையைத் தாழ்த்துதல்**" என்பது வெறும் மார்க்கக் கடமை மட்டுமல்ல. அது ஒரு சிறந்த மனநலப் பயிற்சி என்பதையும், ஒருவரின் ஒழுக்கமான வாழ்விற்கு அது எவ்வளவு அவசியம் என்பதையும் இந்தப் புத்தகம் விரிவாகப் பேசுகிறது.

வெறும் அறிவுரைகளாக மட்டும் இல்லாமல், சமூக வலைதளப் பயன்பாடு மற்றும் பொது இடங்களில் பார்வையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதற்கான நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுப்பு, இன்றைய இளைஞர்களுக்கும் தங்களைச் சீர்திருத்திக் கொள்ள விரும்பும் எவருக்கும் ஒரு கைவிளக்கைப போன்றதாகும். கண்ணியமான வாழ்வைத் தேடுபவர்களுக்கு இது ஒரு மிகச்சிறந்த வழிகாட்டியாகும்.

தீயவற்றிலிருந்து கண்களை விலக்கிக் கொள்ளும் போது, ஒருவருக்குக் கிடைக்கும் மன உறுதி மற்றும் சுயக்கட்டுப்பாடு ஆகியவை மற்ற எல்லா வெற்றிகளுக்கும் அடித்தளமாக அமைகின்றன. கட்டுப்பாடற்ற பார்வை மனிதனை பலவீனமாக்கும். ஆனால் கட்டுப்பாடான பார்வை அவனை மாமனிதனாக்கும் எனும் கருத்து அனைவரும் அறிந்ததே.

அவ்வகையில் ஹஜ்ரத் பீர் ஜுல்ஃபிகார் அஹ்மது நக்ஷபந்தி ﵀ அவர்களின் இந்த உரையை தமிழ் கூறும் சமூகத்திற்கு மொழிபெயர்த்து வழங்குவது மிக அவசியமானதாகும். அல்லாஹ் இந்த நூலை படிக்கக்கூடிய ஒவ்வொரின் உள்ளத்திலும் தீய பார்வையைத் தவிர்ந்திருக்கும் உறுதியை வழங்குவானாக.ஆமீன்

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں. چنانچہ ارشاد باری تعالی ہے۔ "وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ" (اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف مما لک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیءٍ

# வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும் . அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

ஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# தீய பார்வையின் தீங்குகள்

ஒரு மனிதனுடைய பார்வை கட்டுப்பாடின்றி அலைபாய ஆரம்பித்து விட்டால் அதுவே பெரும்பாலான ஆபாச செயல்களுக்கு அச்சாணியாக அமைந்துவிடும். இதனால் தான் ஆராய்ச்சியாளர்கள் தீய பார்வையை ஆபாசங்களின் ஆணிவேர் என்பதாக வர்ணிக்கின்றனர். கண்ணின் இரண்டு துவாரங்களின் வழியாகத்தான் குழப்பங்களின் ஊற்று கொப்பளிக்கின்றது. மேலும் சுற்றுப்புற சூழலில் ஆபாசமும், நிர்வாண கலாச்சாரமும் பரவுவதற்கு அடிப்படை காரணமாக அமைந்திருக்கின்றது. எனவே தான் இஸ்லாம் இந்த இரு துவாரங்களைப் பாதுகாக்க உத்தரவிட்டுள்ளது. இதுவும் இஸ்லாமிய போதனைகளின் அழகு மற்றும் ஒழுங்கமைப்பைச் சுட்டிக்காட்டுகிறது.

**“ஈமான் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களை அவர்களுடைய பார்வையை தாழ்த்தி வைக்கும் படி உத்தரவிட்டிருக்கிறது.”**

எந்த அந்நிய பெண்ணின் மீதும் பார்வை பட்டதினால் இச்சையுடைய வேகம் தூண்டப்பட்டு விடக்கூடாது.

“மூங்கிலே இல்லை என்றால் புல்லாங்குழல் செய்வதெப்படி” என்ற பழமொழிக்கேற்ப பாவத்தின் வழிகள் முழுக்க அடைக்கப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். தவறுகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்பது மிக முக்கியமான விஷயமாகும்.

அனுபவம் என்னவெனில் யாருடைய பார்வை கட்டுப்பாடின்றி அலைபாய்கின்றதோ அவருக்குள்

இச்சையுடைய நெருப்பு இலகுவாகப் பற்றிக் கொள்கிறது. அது அவரை மானக்கேடானவற்றை செய்ய வைக்காமல் ஓயாது.

## பார்வையை பாதுகாப்பது சம்பந்தமான குர்ஆனுடைய வசனங்கள்.

“நபியே இறை நம்பிக்கையாளர்களுக்கு கூறி விடுங்கள் அவர்கள் தங்களுடைய பார்வையைத் தாழ்த்திக் கொள்ளட்டும். தங்களுடைய மர்ம ஸ்தானங்களை பாதுகாத்துக் கொள்ளட்டும். இது தான் அவர்களுக்கு பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்யக்கூடிய அனைத்தையும் அறிந்தவனாக இருக்கிறான்” என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

இறை நம்பிக்கையாளர்களுக்கு திருக்குர்ஆனுடைய இந்த வசனம் ஒரு முழுமையான செய்தியாகும்.

“இந்த ஒரே வசனத்தில் ஒழுக்கம், எச்சரிக்கை மற்றும் அறிவுரை அடங்கியுள்ளது” என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் எழுதியுள்ளனர்.

**ஒழுக்கம்:**

இவ்வசனத்தின் ஆரம்பப் பகுதியில் ஒழுக்க போதனை இடம் பெற்றுள்ளது. அதாவது இறை நம்பிக்கையாளர்கள் பார்க்க தகாதவற்றைப் பார்ப்பதிலிருந்து தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தன் எஜமானருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அடிமைக்கு அழகாகும்.

இதிலிருந்து பார்வைகளைத் தாழ்த்துவது தொடக்கமாகவும் மர்மஸ்தானத்தைப் பாதுகாப்பது

இறுதியாகவும் இருக்கும் என்று தெரிகிறது. இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்ததாகும். இதனால் தான் யாருடைய கண்கள் கட்டுப்பாட்டில் இல்லையோ அவரது மர்மஸ்தானத்தம் அவரது கட்டுப்பாட்டில் இருக்காது என்று அர்த்தமாகும்.

**அறிவுரை:**

அதுவே அவர்களுக்கு பரிசுத்தமானதாகும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.அதாவது பார்வையைத் தாழ்த்துவதின் பிரயோஜனங்களில் ஒன்று உள்ளத்தில் பரிசுத்தம் ஏற்படும் மேலும் பாவத்துடைய ஊசலாட்டம் இல்லாமலாகிவிடும் என்பதாகும். இதில் அவருக்கு பெரும் பலாபலன் உண்டு. இதனால் வணக்க வழிபாடுகளில் மனம் ஒன்றிய நிலை பிறக்கும். இச்சையுடைய, சைத்தானுடைய, தீய ஆன்மாவுடைய ஊசலாட்டுங்களிலிருந்து நிரந்தரமாக விடுதலை கிடைத்துவிடும்.

இந்த வழிகாட்டலைப் பின்பற்றவில்லையானால், தீய பார்வையால் உள்ளத்தின் அமைதியை இழக்க நேரிடும். இதயத்தில் ஏராளமான வருத்தங்கள் வந்து குவியும். சோதனையில் விழக்கூடிய அபாயம் வலுவாக இருக்கும்.

**எச்சரிக்கை:**

நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்யக்கூடிய அனைத்தையும் அறிந்தவனாக இருக்கிறான் என்பதில் மிரட்டல் தோரணை உள்ளது.

அகிலத்தை படைத்த அல்லாஹ்வின் புறத்திலிருந்து எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஒருகால் அடியார்கள் இந்த வழிகாட்டலை பொருட்படுத்தவில்லையானால் நன்கு அறிந்து கொள்ளட்டும் அல்லாஹ் கவனக்குறைவானவனல்ல.

அவர்கள் செய்யக்கூடிய அனைத்து காரியங்களையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். மாறு செய்பவர்களை எவ்வாறு தண்டிப்பது என்பதை நன்கு அறிந்துள்ளான்.

இஸ்லாம் ஆண்களுக்கு தெளிவான வார்த்தையில் தங்கள் பார்வைகளை தாழ்த்த உத்தரவிட்டிருப்பதை போன்று பெண்களையும் புறக்கணிக்கவில்லை என்ற விஷயத்தை கவனத்தில் நிறுத்துவது அவசியமாகும். ஏனெனில் ஆண் பெண் இருவரும் ஒரே மாதிரியான மூலத்திலிருந்தே உருவானவர்களாவர். எனவே பெண்களுடைய இயல்பிலும் மோகம் வைக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் சம்பந்தமாகவும் ஈமான் கொண்ட பெண்களுக்கு சொல்லி விடுங்கள் அவர்களும் தங்கள் பார்வையை தாழ்த்திக் கொள்ளட்டும், தங்கள் மறைவிடங்களை பாதுகாத்துக் கொள்ளட்டும் என்று கூறுகிறான்.

கண்களுடைய கட்டுப்பாடற்ற நிலை இச்சையைத் தூண்டுவதிலும், மர்ம ஸ்தானத்தை கிளர்ச்சியாக்குவதிலும் பெரும் பங்காற்றுகிறது என்ற விஷயம் இவ்விரு வசனங்களின் வாசகப் போங்கின் மூலம் அறிவுறுத்தப் பட்டுள்ளது. மோகம் முத்திய நிலையில் மனிதனுடைய அறிவின் மீது திரை விழுந்து விடுகிறது. புறக் கண்கள் திறந்திருப்பினும் அகக் கண்களை குருடாக்கி விடுகிறது. மனிதன் பாவத்தை செய்து இழிவு மேலும் கேவலம் என்ற பாதாளத்தில் விழுந்து விடுகிறான்.

இச்சை விஷயத்தில் ஆண்களின் நிலைக்கும் சற்றும் குறைவில்லாமல் பெண்களுடைய நிலையும் இருக்கிறது. பெரும்பாலும் பெண்கள் உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாக, மிக வேகமாக கவரப்படக்கூடியவர்களாக இருப்பார்கள்.

அத்துடன் அவர்களுடைய பார்வையும் அசுத்தமாகிவிட்டால் இன்னும் கூடுதல் குழப்பங்கள் பிறந்துவிடும். எனவே அவர்களும் தங்கள் பார்வையை கட்டுப்பாட்டில் வைப்பது மிகமிக அவசியமாகும்.

இமாம் கஜ்ஜாலி ﷺ அவர்கள் நீ கட்டாயம் போர்வையை பாதுகாத்துக் கொள்! அல்லாஹ் உனக்கு அருள் பாளிப்பானாக. அதுவே அனைத்து ஆபத்துகள் மேலும் குழப்பங்களுக்கான ஆணிவேராவும் என்று கூறியுள்ளார்கள்.

இதன் மூலம் பார்வையால் ஏற்படும் குழப்பங்கள் மிக ஆபத்தானவையாக, அதிக பிரச்சனைகள் மற்றும் ஆபத்துகளுடைய காரணியாக அதுவே இருக்கிறது என்பதும் தெரிய வருகிறது.

## பார்வை பாதுகாப்பு பற்றிய நபி ﷺ அவர்களுடைய பொன்மொழிகள்.

நபி ﷺ அவர்களின் கூற்றாவது: உங்கள் பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுங்கள். உங்களுடைய மர்மஸ்தானத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இமாம் இப்னுல் கையும் ﷺ கூறியுள்ளார்கள். பார்வையானது மோகத்தின் தூதாக இருக்கிறது. பார்வையை பாதுகாப்பது தான் உண்மையில் மர்மஸ்தானத்தை பாதுகாப்பதற்கு அடிப்படையானது. அது தான் இச்சையுடைய இடத்திற்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

யார் பார்வையை சுதந்திரமாக அலைய விட்டுவிட்டாரோ அது அவனை அழிவில் போட்டே தீரும். பார்வை தான் மனிதன் சிக்க கூடிய பெரும்பாலான பிரச்சனைகளுக்கான அடிப்படையாக இருக்கிறது.

நபி ﷺ அவர்களின் மற்றொரு பொன்மொழியாவது பார்வை சைத்தானுடைய விஷம் தோய்ந்த அம்புகளில் ஒரு கூர்மையான அன்பாகும்."

சில மகான்களின் கூற்றாவது "பார்வை உள்ளத்தை நோக்கி பாயக்கூடிய விஷம் தோய்ந்த அம்பாகும்."

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் "இரு கண்கள் விபச்சாரம் செய்கின்றன. அதனுடைய விபச்சாரம் தீய பார்வையாகும்".

இந்த ஹதீஸ்கள் மூலம் எந்த மனிதர் அந்நிய ஆண் மற்றும் பெண்ணுடைய முகத்தை இச்சைப் பார்வையோடு பார்ப்பாரோ அவர் தன் மனதளவில் அவரோடு விபச்சாரம் செய்து விட்டார் என்று தெரிய வருகிறது. முன்னோர்கள் தீய பார்வையை காதல் தூது என்பதாக கூறுவார்கள்.

ஜுலைகா ஹஜ்ரத் யூசுப் عليه السلام அவர்களுடைய முகத்தை பார்த்திருக்காவிட்டால் உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாமல் உணர்ச்சி வசப்பட்டு அவரைத் தவறின் பால் அழைத்திருக்க மாட்டாள். கட்டுப்படுத்த முடியாது சில வினாடி ஆசையால் அவரது இழிவான வார்த்தைகளை குர்ஆன் நிலைப்பெறச் செய்து விட்டது.

மானக்கேடான செயல்களின் தொடர்பு மறுமை நாள் வரை அவரோடு இணைக்கப்படும். கெட்ட பார்வையின் இழிவுகள் எவ்வளவு ஆபத்தாவை மற்றும் மோசமானவை என்பதை நாம் இதன் மூலம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## திடீர் பார்வை குற்றமற்றது

பலமுறை வழியில் சென்று வரும்போது அந்நியப் பெண்கள் எதிரில் வந்து விடுவார்கள். யதார்த்தமாக அவர்கள் மீது பார்வை பட வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட

சந்தர்ப்பங்களை பற்றி ஹஜ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலியே! முதல் பார்வை பட்ட பிறகு மறுமுறை பார்க்க வேண்டாம். ஏனெனில் முதலாவது பார்வை குற்றமற்றது. இரண்டாவது அவ்வாறல்ல என்றார்கள்.

இதன் மூலம் திடீரென படக்கூடிய முதல் பார்வை குற்றமற்றது என்று விளங்க முடிகிறது. சில நேரத்தில் முதல் பார்வையும் திட்டமிட்டு பார்க்கப்படுமானால் அதுவும் ஹராமானதாக ஆகிவிடும். முதல் பார்வை மன்னிக்கப்படும் என்பதற்கு இரண்டாவது முறை பார்க்க வேண்டிய தேவையே ஏற்படாத அளவிற்கு முதல் பார்வையே திருப்திகரமாக பார்ப்பது என்பது அர்த்தம் அல்ல. மாறாக யதார்த்தமாக பார்வை பட்டு விட்டால் உடனே பார்வையைத் திருப்பிக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே இதனுடைய கருத்தாகும்.

ஹஜ்ரத் ஜரீர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள் "நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் யதார்த்தமாக படக்கூடிய முதலாவது பார்வை விஷயமாக கேட்டேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடனே உன் பார்வையை திருப்பி கொள்வாயாக" என்று சொன்னார்கள்.

சில நேரத்தில் மருத்துவர் அல்லது நீதிபதி போன்றோர்களுக்கு ஏதேனும் ஷரீஅத் அனுமதித்துள்ள தங்கடத்தை முன்வைத்து அந்நிய பெண்ணுடைய முகத்தை பார்க்கும் சூழல் உருவானால் தேவை அளவு பார்த்து பிறகு பார்வையை விலக்கிக் கொள்ள வேண்டும்.

## தீய பார்வை குழப்பத்திற்கான விதையாகும்

அந்நியர்களின் பக்கம் இச்சையோடு பார்த்தல் அனைத்துவிதமான குழப்பங்களுக்கும் விதை

போன்றதாகும். சைத்தான் அந்நியர்களுடைய முகத்தை அழகுப்படுத்தி முன் வைப்பான். இயல்பாகவே தூரத்திலிருந்து தென்படக்கூடிய பொருட்கள் அனைத்தும் அழகானவயாகவே காட்சியளிக்கும்.

இதனால் தான் ஒரு பிரபல்யமான பழமொழியில் தூரத்துப் பறை மென்மையாகவே முழங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

தீய பார்வையின் மூலம் மனிதனுடைய உள்ளத்தில் பாவத்திற்கான விதை ஒன்று விழுகிறது. அது சந்தர்ப்பம் கிடைக்கும் போது தன் குருத்தை வெளிப்படுத்துகிறது. காபீல் தன்னுடைய சகோதரனான ஹாபிலுடைய மனைவியின் அழகை பார்த்தபோது அவனுடைய உள்ளம் மற்றும் சிந்தனையில் தன் சகோதரனை கொல்ல வேண்டும் என்ற பித்து பிடித்துவிட்டது.

எனவே உலகில் முதலாவதாக கொலைக் குற்றத்தை செய்தவன் என்ற அவப்பெயரை சுமந்து கொண்டான். குர்ஆனில் இவனுடைய துர் நடத்தை பற்றி விவரிக்கப்பட்டது. பாவத்திற்கு அடிக்கல் நாட்டிய காரணத்தினால் மறுமை நாள் வரை எத்தனை கொலை குற்றவாளிகள் வருவார்களோ அனைவரின் கொலைக்கான பாவச்சுமையும் இவனுடைய தலைமேல் போடப்படும்.

எனவே முதல் பார்வை பார்ப்பது மட்டுமே கட்டுப்பாட்டில் உள்ளது. பிறகு நடைபெறும் அனைத்து செயல்களும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும் என்று அறிய முடிகிறது.

“ஒரு முறை உன் சபையைக் கண்டு வரலாம்” என்று புறப்பட்டார்.

இங்கு வருபவரெல்லாம் இங்கேயே தன்னை அறியாமல் அமர்ந்து கொள்வார்.”

எனவே முதல் பார்வையை விட்டும் தவிர்ந்து கொள்வதே மிக சிறந்ததாகும். பிறகு ஏற்படும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளுதல் அறிவுடையோருக்க அழகல்ல.

## தீய பார்வை விபச்சாரத்தின் ஏணியாகும்

நபி ﷺ அவர்களின் கூற்றாவது கண்களின் விபச்சாரம் பார்ப்பதாகும், காதுகளில் விபச்சாரம் கேட்பதாகும், நாவின் விபச்சாரம் பேசுவதாகும், கைகளின் விபச்சாரம் பிடிப்பதும், கால்களின் விபச்சாரம் நடப்பதுமாகும். உள்ளம் ஏங்குகிறது மற்றும் எதிர்பார்க்கிறது. மர்மஸ்தானம் அதை உண்மை அல்லது பொய்ப் படுத்துகிறது.

இமாம் கஜ்ஜாலி ؒ அவர்கள் கூறினார்கள். பார்வை ஒருவித உணர்வைத் தூண்டும். அந்த உணர்வு எண்ணத்தை உருவாக்கும். எண்ணம் ஆசையை உருவாக்கும். ஆசை வலுவான நாட்டத்திற்கு வித்திடும்.

இதன் மூலம் விபச்சாரத்துடைய நாட்டம் ஒரு நபர் அந்நியப் பெண்ணைப் பார்ப்பதன் மூலமாக ஏற்படுகிறது என்பதை அறிய முடிகிறது. ஒரு கால் பார்க்கவே இல்லை என்றால் நாட்டம் உருவாகவதற்கான வாய்ப்பே இல்லை.

எனவே விபச்சாரத்தினுடைய முதல் படிக்கட்டு தீயப் பார்வை தான் என்பதை அறிய முடிகிறது. ஒரு பழமொழியில் உலகின் மிக தூரப் பயணமும் ஒரு அடி எடுத்து வைப்பதில் தான் தொடங்குகிறது. அவ்வாறே விபச்சாரத்தின் தொடக்கமும் தீய பார்வையில் தான் தொடங்குகிறது. எனவே ஒரு இறை நம்பிக்கையாளர்

முதல் படிக்கட்டில் ஏறுவதிலேயே சுதாரிப்புடன் இருக்க வேண்டும்.

## தீய பார்வையை விட்டும் தவிர்ந்திருப்பதில் ஈமானின் சுவை

முஸ்னது அஹமத் என்று கிரந்தத்தில் நபி ﷺ உடைய ஒரு ஹதீஸ் வந்துள்ளது. எந்த முஸ்லிமான அடியான் ஒரு பெண்ணுடைய அழகைப் பார்த்த முதல் சந்தர்ப்பத்திலே தன் பார்வையைத் தாழ்த்திக் கொள்வாரோ அவருக்கு அல்லாஹ் வணக்க வழிபாடுகளில் இன்பத்தை வழங்குகிறான்.

மற்றும் ஒரு ஹதீஸில் "யார் என்னுடைய பயத்தின் காரணமாக தீய பார்வையை விட்டு விடுகிறாரோ அவருக்கு உள்ளத்தில் சுவையை தரக்கூடிய இறை நம்பிக்கையை நான் வழங்குவேன்."

தீய பார்வையின் மூலம் கிடைக்கக்கூடிய தற்காலிகமான, அற்ப சுகத்தை விடுவதின் மூலம் ஈமானுடைய நிரந்தரமான இனிமையும், வணக்கங்களுடைய ருசியும் கிடைக்கின்ற தென்றால் இது எவ்வளவு பயனுள்ள லாபகரமான வியாபாரமாகும்.

அல்லாஹ் இப்படிப்பட்ட நபருடைய உள்ளத்தில் ஒரு விதமான நிம்மதியையும், அமைதியையும் ஏற்படுத்துவான் என்பது உறுதியான விஷயமாகும். அவ்வாறே ஒரு செயலுக்கான கூலி அதன் விதத்திற்கேற்பவே அமைய வேண்டும் என்பதும் நடைமுறை விதியாகும்.

எனவே யார் அந்நிய பெண்களைப் பார்ப்பதினால் ஏற்படும் இன்பத்தை துறப்பாரோ அல்லாஹ் அவருக்கு

வணக்க வழிபாடுகளின் மூலம் ஈமானுடைய இன்பத்தை வழங்கி விடுவான்.

## தீய பார்வை ஒருபோதும் திருப்தியைப் ஏற்படுத்தாது

ஹஜ்ரத் தானவி ﵀ அவர்கள் கூறுவார்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் தீய பார்வை பார்த்துக் கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கான ஆண்களை அல்லது பெண்களை உற்று நோக்கினாலும், பல மணி நேரங்கள் உற்றுப் பார்த்தாலும் ஒருபோதும் அதில் திருப்தி ஏற்படாது. பெரும்பாலும் தீய பார்வை என்பது அவனுக்குள் என்றும் தணியாத ஒரு தாகத்தை ஏற்படுத்தி விடும். வயிற்றுப்போக்கு உள்ள ஒருவருக்கு வயிறு வெடிக்கும் அளவுக்கு தண்ணீர் குடித்தாலும், அவரின் தாகம் தணியாதது என்பதைப் போன்றாகிவிடுகிறது.

அல்லாஹ் ஒவ்வொன்றையும் மற்றொன்றை விட அழகாகவே படைத்துள்ளான். ஒரு நபர் எத்தனை தோற்றங்களைத் தான் பார்ப்பார்?அதன் விளைவு இவ்வாறே அமையும் அவர் ஒன்றைப் பார்த்தால் அதனால் மற்றொன்றைப் பார்க்க ஏங்குவார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் இந்த நதியில் தொடர்ந்து நீந்திக் கொண்டே தான் இருப்பார். இந்த நதிக்கோ கரை இல்லாததால் அவர் ஒருபோதும் கரையை அடைய மாட்டார்.

தீய பார்வை காயத்தை ஆழமாக்குகிறது. தீய பார்வை என்ற அம்பு குத்தும்போது, இதயத்தில் காயம் ஏற்படுகிறது. தீய பார்வை எவ்வளவு அதிகமாக்கப்படுமோ, காயம் அவ்வளவு ஆழமாக மாறும்.

தீய பார்வை என்ற அம்பு எறியப்பட்டால், அதை எறிந்தவர் தான் முதலில் கொல்லப்படுவார். காரணம், தீய பார்வை பார்த்தவன் இரண்டாவது பார்வையை தனது காயத்திற்கு மருந்தாகக் கருதுவான். அது காயத்தை அதிக ஆழமாக்கிவிடும் என்று இமாம் இப்னு கையும் ﵀ கூறியுள்ளார்கள்.

*மக்கள் முட்களை விட்டு விலகிச் செல்கிறார்கள்,*

*நாமோ பூக்களால் காயப்படுத்தப்பட்டிருக்கிறோம்.*

தீய பார்வையால் ஏற்படும் துன்பத்தில் பொறுமை மேற்கொள்வதை விட கண்களை மூடிக் கொள்வது எளிதானது என்று இமாம் இப்னு கையும் ﵀ கூறினார்கள்.

வயதானவர்கள் கூட தீய பார்வையிலிருந்து பாதுகாப்பாக இல்லை.!

விபச்சாரம் செய்வதிலிருந்து பலர் பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அதற்காக பெரும் தயாரிப்புகளைச் செய்ய வேண்டும். முதலாவதாக, அவர்கள் விபச்சாரம் செய்ய விரும்பும் நபர் ஒப்புக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, பொருத்தமான வாய்ப்பும், இடமும் இருக்க வேண்டும். மூன்றாவதாக, தனிமை இருக்க வேண்டும். இல்லையெனில், யாராவது கண்டுபிடித்தால், அவர்களின் மரியாதை கெட்டுவிடும் என்ற பயம் இருக்கும். எனவே, மரியாதைக்குரியவர்கள் அதைச் செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

ஒரு பெண்ணுடன் விபச்சாரம் செய்ய வேண்டியிருந்தால், ஒருவர் பணத்தையும், செல்வத்தையும் செலவிட வேண்டும். மேலும், எய்ட்ஸ், டைபஸ் மற்றும் கோனோரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டு விடுமோ என்ற பயமும்

இருக்கும். ஆனால் தீய பார்வை என்ற பாவத்தைச் செய்வதற்கு எந்த உபாயங்களும் தேவையில்லை.

அல்லாஹ்வுக்கு மட்டுமே அவ்வாறு தீய பார்வை பார்ப்பவனுடைய நோக்கம் என்னவென்று தெரியும் என்பதால் அவதூறோ அல்லது வேறு அச்சமோ எதுவும் ஏற்படாது. உண்மையில் உடலுறவு கொள்ளும் திறன் இல்லாத வயதானவர்களும் கூட தீய பார்வையின் பாவத்தில் விழுகிறார்கள். மாறாக, அவர்கள் இப்பாவம் பற்றிய வருத்தத்திலிருந்தே முற்றிலும் விடுபட்டுள்ளனர் என்று கூட சொல்லலாம்.

மாறாக, அவர்களால் இதற்குப் பிறகுள்ள தவறை நம்மால் செய்ய முடியவில்லையே என்ற ஆழ்ந்த வருத்தத்தில் மூழ்கி இருக்கிறார்கள்.

"**இளமையை விட முதுமையே மிகவும் உற்சாகமானது.அமைதியாக இருக்கும் காலையிலே தான் விளக்கு பிரகாசமாக எரிகிறது**" என்று ஒரு கவிஞர் கூறியுள்ளார்.

சிலருடைய உடல் வயோதிகமடைந்து கொண்டும், உள்ளம் வாலிபம் ஆகிக்கொண்டே செல்லும். அவர் எந்நேரமும் தன் வாலிபத்துடைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டே இருப்பார்.

வாலிபக்கால சிந்தனையிலேயே வயோதிகம் முழுக்க கழிந்து விட்டது. என்ன இரவோ இது, ஒரே கதையிலேயே முடிந்து விட்டது.

சிலருடைய கால்கள் மண்ணறையை நோக்கிச் செல்ல ஆயத்தமாகிவிட்டன. அவர்களின் முதுகுகள் வளைந்து விட்டன. ஆனாலும் அவர்களோ தங்களின் இளமையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இளமை எங்கே இருந்தது? அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதைத் தானே தேடிக் கொண்டிருக்கிறேன் முதுகை வளைத்துக் கொண்டே.

இளமைப்பருவம் அலட்சியத்தில் கடந்து சென்றிருந்தால் முதுமையிலாவது அல்லாஹ்வை நினைவு கூர்வோம் என்று ஒருவர் நினைக்க வேண்டும்.

ஆனால் இங்கோ கங்கை எதிர்த்திசையில் பாய்கிறது. முதுமையின் போது இளமைக்கான ஆசை ஓ, எந்த நேரத்தில் எந்த ஞாபகம் வந்தது?

இன்னொரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால், பெண்கள் தங்களை வயதானவர்களாகக் கருதி முக்காடுகளால் மூடாமலிருப்பதும் இவர்களுக்கு தீய பார்வை என்ற பாவத்தைச் செய்வதை எளிதாக்குகிறது. காமவெறி கொண்ட முதியவர்களின் தலைமுடியை வெண்மையாக ஆக ஆக அதே நேரத்தில் தங்களின் இதயங்களைக் கருப்பாக மாற்றிக் கொள்கிறார்கள்.

மேலும் நியாயத் தீர்ப்பு நாளில், அவர்கள் பின்வருமாறு சொல்லாமல் சொல்வார்கள்.

செய்யாத பாவங்களுக்கு கூட, வருத்த உணர்வு இருக்கும். இறைவா, செய்த பாவங்களுக்கு ஒரு தண்டனை இருந்தால்.

ஹஜ்ரத் தானவி ﵀ கூறியுள்ளார்கள் என்னை ஒரு முதியவர் சந்திக்க வநதார். அவர் பல விஷயங்களில் பயபக்தியாளராக இருக்கக்கூடியவர். ஆனால் அவர் அந்நியப் பெண்களை காமவெறிக் கண்களால் பார்ப்பதற்கு தான் அடிமையாக இருப்பதாக தனது நிலையைப் பற்றி விளக்கினார்.

வயோதிகர் கப்ருடைய விழிம்பை அடைந்து கொண்டிருக்கிறார். ஆனாலும் இந்த தொந்தரவு தரக்கூடிய நோய் அவருடனே இணைந்திருக்கிறதெனில் தீய பார்வை எவ்வளவு ஆபத்தானது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

## தீய பார்வையினால் அமல் செய்வதற்கான வாய்ப்பு அகற்றப்பட்டு விடுகிறது

மௌலானா முஹம்மது ஜகரியா ﵀ அவர்கள் “தீய பார்வை என்பது மிகக் கொடூரமான நோயாகும். என்னுடைய சொந்த அனுபவம் என்னவெனில் என்னிடத்தில் பல அன்பர்கள் “எங்களுக்கு அமல்கள் செய்வதில் தொடக்கமாக மிகுந்த இன்பமும், ஆர்வம் இருந்தது. ஆனால் தீய பார்வையின் காரணமாக வணக்கத்துடைய சுவை மேலும் இன்பம் முற்றிலுமாக நாசமாகிவிட்டது. அதற்கு பிறகு சிறுக சிறுக வணக்கங்களை விடுவதற்கு அதுவே காரணமாக அமைந்துவிட்டது” என்று கூறினார்கள்.

உதாரணமாக ஆரோக்கியமான வாலிபருக்கு காய்ச்சல் ஏற்பட்டு சூடு நீங்குவதற்கான அடையாளமே இல்லாமல் இருந்தால் பலவீனம் மற்றும் இயலாமையின் காரணமாக அவர் நடப்பது, திரிவது போன்றவை சிரமமாகிவிடும். எந்த வேலை செய்வதற்கும் மனம் விரும்பாது. படுக்கை விரிப்பில் படுத்தே இருக்க விருப்பமாக இருக்கும்.

அவ்வாறே தீய பார்வை என்ற நோய் ஒட்டிக்கொண்ட நபரும் அந்தரங்கமாக பலவீனமடைந்து விடுவார். நற்காரியங்கள் செய்வது அவருக்கு சிரமமாக ஆகிவிடும். வேறு வார்த்தையில் சொல்வதானால் அமல் செய்வதற்கான

வாய்ப்பு அவரிடமிருந்து எடுக்கப்பட்டுவிடும். நற்காரியங்கள் செய்வதற்கு நிய்யத் வைப்பார். ஆனால் தீய பார்வையின் காரணமாக அந்த நிய்யத்தில் பலவீனம் ஏற்பட்டுவிடும்.

நாங்கள் ஹுரைப் பற்றிக் கேள்விப் பட்டு தொழுத் தயாராக இருந்தோம். ஆனால் சிலைகளின் தோற்றத்தைப் பார்த்த பிறகு எங்கள் நோக்கம் மாறிவிட்டது.

## தீய பார்வையினால் மனன சக்தி பலவீனமடைதல்

மௌலானா கலில் அஹமத் சஹரன்பூரி ﵀ கூறுவார்கள் அந்நிய பெண்களின் பால் அல்லது சிறுவர்களின் பால் இச்சை கண் கொண்டு பார்ப்பது மனன ஆற்றலை பலவீனப்படுத்திவிடும்.

அதை நிரூபிப்பதற்கு இந்த ஒன்றே போதுமானது. தீய பார்வை பார்க்கக்கூடிய ஹாபிழ்களுக்கு மன்ஜில் கூட நினைவிருக்காது. இதனால் குர்ஆனை மனனம் செய்து கொண்டிருக்கிற மாணவர்களுக்கு பாடத்தை மனனம் செய்வதில் பெரும் சிக்கல் ஏற்படும்.

இமாம் ஷாபிஈ ﵀ தன்னுடைய ஆசிரியர் இமாம் வகீஃ ﵀ அவர்களிடத்தில் தன்னுடைய மனன சக்தியின் பலவீனத்தைப் பற்றி முறையிட்டார்கள்.

அதற்கு அவர்கள் பாவத்தை விட்டு விலகி இருக்க பரிந்துரை செய்தார்கள். இமாம் ஷாபிஃ ﵀ அவர்கள் இக்கருத்தை ஒரு கவிதை நடையில் கூறியுள்ளார்கள்.

**“நான் என் ஆசிரியரிடத்தில் என்னுடைய மனன சக்தியின் பலவீனத்தைப் பற்றி முறையிட்டேன்.**

**அவர்கள் எனக்கு பாவத்தை விட்டு விலகி இருக்க உபதேசித்தார்கள்.**

**மார்க்க ஞானமென்பது அல்லாஹ் வழங்கும் பிரகாசமாகும்.**

**எந்த பாவிக்கும் அப்பிரகாசத்தை அல்லாஹ் வழங்க மாட்டான்" என்று கூறினார்கள்.**

கல்லூரி, பல்கலைக்கழகங்கள் மேலும் மதரசாக்களில் படிக்கக் கூடிய ஆண், பெண் பிள்ளைகளுக்கு இதில் படிப்பினைக்குரிய பாடம் இடம் பெற்றுள்ளது.

## தீய பார்வை இழிவு மற்றும் கேவலத்திற்கான காரணியாகும்

ஷேஹ் வாசிதி ﵀ கூறுகிறார்கள் அல்லாஹ் ஒரு அடியானை கேவலப்படுத்த எண்ணினால் அவனுக்கு அழகிய முகங்களைப் பார்க்கக் கூடிய பழக்கத்தை ஏற்படுத்தி விடுவான். இதன் மூலம் தீய பார்வை என்பது இழிவு, கேவலத்திற்கான அடிப்படை காரணி என்பது தெரிய வருகிறது.

இதனாலேயே நற்பாக்கியம் பெற்ற நபர்கள் தங்கள் பார்வைகளை எப்போதும் தாழ்த்திக் கொள்வார்கள். அதனால் பெரும் பெரும் குழப்பங்கள் மேலும் சிரமங்களிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

இந்த காதல் விவகாரத்தில் கண்ணியமானவனும் கௌரவத்தை இழந்து விடுவான் என்று கவிஞர் மீர் தகி மீர் உடைய கவிதை நூறு சதவீதம் உண்மையானது.

காதல் காலிபையும் நிலைகுலைய வைத்துவிட்டது, இல்லையென்றால் நாமும் சாதிக்கத் தெரிந்தவர்கள் தானே!

# தீய பார்வையினால் அபிவிருத்தி அழிந்துவிடுகிறது

தீய பார்வையின் மோசமான விளைவுகளில் ஒன்று மனிதனுடைய வாழ்விலிருந்து உணவு மற்றும் நேரத்திலுள்ள பரக்கத் எடுபட்டு விடுவதாகும்.

சிறிய சிறிய விஷயங்கள் பெரும் பெரும் பிரச்சனைகளாக மாறிவிடும். எந்த வேலையை செய்ய முயற்சி செய்தாலும் அரைகுறையாக நின்று விடும். வெளிப்படையாக இலகுவான வேலை, விரைவாக முடிந்து விடும் என்று தெரியும்.

ஆனால் முடிய வேண்டிய சரியான சந்தர்ப்பத்தில் அந்த வேலை முடியாமல் இழுத்துக் கொண்டு செல்லும். அதுவே பெரும் சிரமம் மேலும் தொந்தரவுக்கு காரணமாக அமைந்துவிடும். விவரம் தெரியாத மக்கள் யாரோ எதையோ செய்து விட்டார்கள் என்று எண்ணுவார்கள்.

ஆனால் அது தன்னுடைய ஆன்மாவின் அசுத்தத்தின் காரணமாக இந்த சோதனையில் சிக்கி இருக்கிறோம் என்று அறிய மாட்டார்கள்.

ஒரு காலம் இருந்தது மண்ணில் கை வைத்தாலும் பொன்னாக மாறிவிடும். ஆனால் இன்று பொன்னில் கை வைத்தாலும் மண்ணாக மாறிவிடுகிறது என்று அவ்வப்போது புலம்பிக் கொள்வார்கள்.

எனவே தீய பார்வையின் காரணமாக ஒரு மனிதனுடைய வாழ்விலிருந்து பரக்கத் எடுக்கப்பட்டு விடப்படுகிறது என்பதை இதன் மூலம் உணரலாம்.

## தீய பார்வை கொண்டவனிடம் சைத்தான் நிராசையடையாமல் இருக்கிறான்

ஒரு மகானுக்கு சைத்தானோடு சந்திப்பு ஏற்பட்டது. அவர் அந்த சைத்தானிடம் மனிதன் உன்னுடைய வலையில் மிக இலகுவாக அகப்பட்டுக் கொள்ளக் கூடிய மிக ஆபத்தான, உறுதியாக நஷ்டம் ஏற்படக்கூடிய ஒரு செயல் எது என்பதாக கேட்டார்.

அதற்கு அந்த சபிக்கப்பட்டவன் அந்நிய பெண்களின் பக்கம் இச்சையோடு பார்ப்பது என்று பதில் கூறினான். நான் தீய பார்வை பார்ப்பவன் விஷயத்தில் மிக புத்துணர்வோடு இருக்கிறேன். என்றாவது ஒருநாள் அவனை பாவத்தில் ஈடுபடுத்தி என் வலையில் சிக்க வைத்தே தீருவேன்.

யார் பார்வை தாழ்த்திக் கொள்கிறாரோ அவர் என்னுடைய பெரும்பாலான சூழ்ச்சிகள் பலிக்காதவராக இருப்பார். நான் நாலா புறங்களிலும் ஆதமுடைய மக்களை வழி கெடுப்பதற்காக சத்தியம் செய்துள்ளேன். கீழ்த் தரப்பு அது பாதுகாக்கப்பட்டதாக ஆகிவிட்டது. எனவே யார் தன்னுடைய பார்வையைக் கீழ்நோக்கி வைத்துக் கொள்கிறாரோ அவர் என்னை நிராசையாக்கி விடுவார்.

## தீய பார்வையினால் நன்மைகள் அழிந்து பாவம் உறுதியாகி விடுகிறது

அந்நிய பெண்களை காமக் கண்களால் பார்ப்பவர் பொதுவாக விரைவிலோ அல்லது பிறகோ காதலில் விழுந்துவிடுவார். அவர் அவளை தனது அன்புக்குரியவராக ஆக்குகிக் கொள்வார்.

ஷக்ஸேவின் கூற்றுப்படி,

**நீயே என் மார்க்கமாவாய் என் நம்பிக்கையாவாய்,**

இந்தச் செயல் மறைவான ஷிர்க் என்று அழைக்கப் படுகிறது. அதே சமயம் ஷிர்க் என்பது செய்த செயல்கள் அனைத்தையும் அழிக்கக்கூடய மாபாதகச் செயலாகும்.இது நன்மைகள் அனைத்தையும் அழித்து பாவங்களை உறுதியாக்கும் செயலாகும்.

## தீய பார்வையினால் அல்லாஹ்வின் ரோஷம் பொங்கி எழுகிறது

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் நான் மிக ரோஷக்காரனாக இருக்கிறேன். அல்லாஹ் என்னைவிட கூடுதல் ரோஷமுள்ளவனாக இருக்கிறான். இந்த ரோஷத்தின் காரணமாகவே உள்ரங்க, வெளிரங்க அனைத்து மானக்கேடானவற்றையும் ஹராம் ஆக்கியிருக்கிறான்.

தீய பார்வை ஆபாச செயல்களுக்கான முன்னுரையாகும். பிறரை தீய பார்வையினால் பார்க்க ஆரம்பித்தவுடன் அல்லாஹ்வுடைய ரோஷம் தூண்டப்படுகிறது. தன்னுடைய உயர்ந்த சபையில் அவனை சபிக்கப்பட்டவனாக, விரட்டப்பட்டவனாக அல்லாஹ் ஆக்கி விடுகிறான்.

தீய பார்வை பார்க்கக்கூடிய நபரை தன் அருளை விட்டும் தூரமாக்கி விடுகிறான். யார் நல்லவர்களாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் தீய பார்வையிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஏனெனில் அப்போதுதான் அல்லாஹ்வுடைய அருள் அவருக்கு சமீபமாக இருக்கும்.

# தீய பார்வை பார்ப்பவர் சபிக்கப்பட்டவர்

தீய பார்வை பார்ப்பவர் சபிக்கப்பட்டவர் என்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

அந்நிய பெண்களைப் பார்ப்பவர் மீதும், எதன் பால் பார்க்கப்படுகிறதோ அதன் மீதும் அல்லாஹ்வுடைய சாபம் உண்டாவதாக என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

எந்த வாலிபப் பிள்ளைகள் சீவி சிங்காரித்துக் கொண்டு, பர்தா இல்லாமல் கடைவீதிகளில் சுற்றித் திரிகின்றனரோ, அவ்வாறே யார் அவர்களின் பக்கம் இச்சையோடு பார்க்கிறார்களோ இந்த இரு சாராரும் அல்லாஹ்வுடைய சாபத்திற்கு தகுதியானவர்களாக இருக்கிறார்கள்.

சீவி சிங்காரித்துக் கொண்டு, பர்தா இல்லாமல் தெருக்களிலும் கடைவீதிகளிலும் சுற்றித் திரியக்கூடிய பெண்களும், அவர்களின் பால் இச்சைப் பார்வையோடு பார்க்கக் கூடிய ஆண்களும் ஒரே நேரத்தில் அல்லாஹ்வுடைய சாபத்திற்குரியவர்களாக இருப்பார்கள். இது எவ்வளவு பெரிய நஷ்டம். தீய பார்வை என்ற இப்பாவத்தினால் அல்லாஹ்வுடைய மாபெரும் அருளை விட்டும் நீங்கிவிடுகிறார்கள்.

அத்துடன் அவர் மீது மழை போன்று சாபம் பொழிய இது காரணமாக அமைந்துவிடுகிறது. எனவே தீய பார்வை என்ற இப்பாவத்திலிருந்து உடனடியாக தவ்பா செய்தாக வேண்டும். இல்லையானால் ஒருபுறம் மரணம் வந்துவிடும் மறுபுறம் அல்லாஹ்வுடைய அருளுக்கு பதிலாக சாபங்கள் நம் மீது பொழிந்து கொண்டிருக்கும். இது இம்மை மறுமை இரண்டிலும் பெருத்த நஷ்டத்திற்குக் காரணமாகிவிடும். இதுவே மிக பகிரங்கமான நஷ்டமாகும்.

## தீய பார்வையை மக்கள் அற்பமாகக் கருதுகின்றனர்

தீய பார்வை ஒரு பெரும்பாவம் என்றாலும், பெரும் பாலான மக்கள் அதை ஒரு சிறிய பாவமாகக் கருதுகிறார்கள். எனவே அவர்கள் அதை தயக்கமின்றி செய்கிறார்கள். இந்த பாவம் முதலில் இளமையில் அதிகப்படியான காம உணர்வுகளால் நடைபெறுகிறது. பின்னர் ஒரு நோயாக அதுவும் மண்ணறை செல்லும் வரை விலகாத, தீராத நோயாக ஒட்டிக் கொள்கின்றது. எனவே, இந்த பாவம் ஒரு சிறிய பாவம் அல்ல, மாறாக மிகப்பெரிய துன்பங்களில் ஒன்றாகும்.

## தீய பார்வையிலிருந்து தீய செயல்கள் வரை

நெருப்பும், சுடரும் ஒரு தீப்பொறியினால் தொடங்குவது போல் அனைத்து ஆபத்துக்களும் பார்வையினாலே தொடங்குகின்றது. எனவே, அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாக்க பார்வையைப் பாதுகாப்பது அவசியமாகும் என்று இமாம் இப்னு கையும் ﵀ கூறியுள்ளார்கள்.

தீய பார்வை பழக்கமுள்ளவர்கள் கெட்ட செயல்களுக்கு அடிமையாகி விடுவார்கள். கண்களைத் சுதந்திரமாக திரிய விடுபவர்களுக்கு அவர்களுடைய அந்தரங்க உறுப்புகளை கட்டுப்படுத்த முடியாமலாகிவிடும் என்பது உறுதியானது. பிறகு அதுவே அருவருக்கத்தக்க செயல்களை செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்திவிடும். எனவே கண் தொடங்குவதை அந்தரங்க உறுப்புகள் முடித்து விடுகின்றன என்பதை அறிய முடிகிறது.

# தீய பார்வையினால் உடலிலிருந்து ஒரு வகையான துர்வாடை வீசுதல்

ஷேகுல் ஹதீஸ் மௌலானா ஜகரிய்யா ﵀ அவர்கள் கூறுகிறார்கள் தீய பார்வையினால் ஆடையில் ஒரு வகையான துர்வாடை உருவாகிறது என்பது அனுபவப்பூர்வமான விஷயமாகும்.

தீய பார்வை எவ்வளவு ஆபத்தான நோயாகும்!. அதனுடைய தாக்கம் உடனடியாக வெளிப்புறத்தின் மீது படுகிறது.எந்த அளவிற்கெனில் உடல் மேலும் ஆடையில் ஒரு வித்தியாசமான அருவருக்கத்தக்க துர்வடைவிச ஆரம்பித்து விடுகிறது.

இதற்கு நேர் மாற்றமாக யார் தன்னுடைய பார்வையை பரிசுத்தமாக்கிக் கொள்கிறார்களோ, கற்பொழுக்கம் உள்ள வாழ்க்கை வாழ்கிறார்களோ அவர்களுடைய உடலிலிருந்து ஒரு வகையான நறுமணம் வீசுகிறது. ஹதீஸிலும் இதே கருத்து காணக் கிடைக்கிறது.

நபி ﷺ அவர்களுடைய புனித உடலிலிருந்து நறுமண வாசம் வீசும் என்பதை சஹாபாக்கள் விளங்கியிருந்தார்கள். எனவே தான் எந்த வழியாக நபி ﷺ கடந்து சென்றுள்ளார்கள் என்பதை அன்னாரின் நறுமணத்தை வைத்து அறிந்து கொள்வார்கள்.

ஒரு அறிவிப்பில் ஹஜ்ரத் உம்மு ஸலமா ﵂ அவர்கள் சிறு பிள்ளைகளின் மூலமாக நபி ﷺ அவர்களுடைய புனித உடலிலிருந்து வழியக்கூடிய வியர்வைத் துளிகளை ஒரு கண்ணாடி குவளையில் ஒன்று சேர்த்து, அதை தன்னிடத்திலுள்ள நறுமணத்தில் கலந்து பயன்படுத்துவார்கள்

என்று வந்துள்ளது. அதனால் நறுமணத்தின் வாடை இரட்டிப்பாகிவிடும் என்று கூறியுள்ளார்கள்.

இதே விஷயம் ஹஜ்ரத் அபூபக்கர் ﵁ அவர்கள் சம்பந்தமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஜ்ரத் உமர் ﵁ அவர்கள் அபூபக்கர் ﵁ அவர்களுடைய நறுமணம் கஸ்தூரியின் நறுமணத்தை விட சுகந்தமானது என்று கூறியுள்ளார்கள்.

இதன் மூலம் யார் கற்பொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்கிறார்களோ அவர்களுடைய உடலிலிருந்து நறுமணம் வீசும் என்பதும் யார் தீய பார்வை, மானக்கேடான காரியங்களை செய்கிறார்களோ அவர்களுடைய உடலிலிருந்து துர்வாடை வீசும் என்பதும் அறிய முடிகிறது.

அமெரிக்கா, ஐரோப்பாவிற்கு பயணம் செய்தவர்கள் அறிந்திருப்பார்கள். அங்குள்ள மக்கள் பார்ப்பதற்கு வெள்ளை நிறத் தோற்றமும், சுத்தமான ஆடைகளையும் அணியக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் விமானத்தில் உங்களுக்கு அருகிலுள்ள இருக்கையில் அமர்ந்தால் அவர்களிடத்திலிருந்து ஒரு வித்தியாசமான துர்வாடை வீசுவதை உணர முடியும்.

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

اِنَّمَا الْمُشْرِكُوْنَ نَجَسٌ

**நிச்சயமாக இணைவைப்பாளர்கள் அசுத்தமானவர்களாக இருக்கிறார்கள்.**

அசுத்தமானவற்றிலிருந்து துர்வாடை வீசும் என்பதை உலகம் அறிந்திருக்கிறது.எனவே கூடுதலாக எதையும் சொல்ல வேண்டிய தேவை எதுவும் இல்லை.

## தீய பார்வைக்கான உடனடி தண்டனை

ஒருவருடைய வீட்டு துவாரத்தின் வழியாக, ஜன்னல் அல்லது கதவு வழியாக எட்டிப் பார்ப்பதும் தீய பார்வையின் ஒரு வகையாகும். ஹதீஸ்களில் இது சம்பந்தமாக கடினமான எச்சரிக்கை வந்துள்ளது. எட்டிப் பார்ப்பவருடைய கண்களை காயப்படுத்துவதற்கு அந்த வீட்டாருக்கு முழு அனுமதி உண்டு என்று நபி ﷺ கூறினார்கள்.

அனுமதியில்லாமல் யாரேனும் உங்கள் வீட்டில் எட்டிப் பார்ப்பார்களேயானால் பொடிக்கல்லை வீசுங்கள். அதில் அவருடைய கண் கலங்கினாலும் உங்கள் மீது எந்த குற்றமில்லை.

## தீய பார்வையின் காரணமாக திருக்குர்ஆன் மறந்து விடுதல்

இமாம் இப்னு ஜவ்ஜி ؒ அவர்கள் தல்பீஸே இப்லீஸ் என்ற தன்னுடைய புத்தகத்தில் எழுதியுள்ளார்கள். அபூ அப்துல்லாஹ் இஜ்லா ؒ அவர்கள் கூறினார்கள்.நான் நின்றவாறு ஒரு அழகான கிருத்துவப் பெண்ணின் முகத்தை பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அபு அப்துல்லாஹ் பல்கி ؒ அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். ஏன் நிற்கிறாய் என்று கேட்டார்கள்.

நான் ஹஜ்ரத் அவர்களே இதோ இந்த அழகிய முகமும் கூட நரக நெருப்பில் வேதனை செய்யப்படுமா என்று கேட்டேன். அவர்கள் தன்னுடைய இரு கைகளை என்னுடைய முதுகின் மீது தட்டி சில நாட்களுக்குப் பிறகாயினும் சரி இந்த தீய பார்வையின் விளைவு உனக்கு ஏற்பட்டே தீரும் என்றார்கள். இதிலிருந்து 40

வருடங்களுக்கு பிறகு இந்த பாவத்தின் பீடையினால் நான் மனனம் செயதிருந்த திருக்குர்ஆன் எனக்கு மறந்து விட்டது.

அபுல் அத்யான் ﷺ கூறுகிறார்கள் நான் என்னுடைய ஆசிரியர் அபூபக்கர் தக்காக் ﷺ அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். அப்போது வழியில் சென்ற ஒரு இளம் வயது சிறுவனுடைய முகத்தை ஆசைக் கண் கொண்டு நான் பார்த்தேன். இதை உணர்ந்து கொண்ட என்னுடைய ஆசான் மகனே! நீ இதன் விளைவை சந்திப்பாய் உடனடியாக இல்லையானாலும் சரி என்று கூறினார்கள். சில வருடங்களுக்குப் பிறகு நான் மனனம் செய்த குர்ஆன் மறந்துவிட்டது.

## புகைப் படங்களும், தீய பார்வையும்

செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்களை அலங்கரிக்கும் நிர்வாணப் படங்களைப் பார்ப்பது அல்லது பாலியல் தலைப்புகளில் தொகுக்கப்பட்ட பத்திரிகைகளின் அட்டைகளில் அச்சிடப்பட்டிருக்கக்கூடிய படங்களைப் பார்ப்பதும் தீய பார்வையின் புதிய வகைகளில் ஒன்றாகும்.

திரைப்படங்கள் மற்றும் நாடகங்களில் பணிபுரியும் பெண்களின் படங்களைப் பார்ப்பது, செய்திகளைக் கேட்கிறோம் என்ற சாக்குப்போக்கில் தொலைக்காட்சி அறிவிப்பாளர்களைப் பார்ப்பது, நடைபயிற்சி செய்யும் போது சாலையின் ஓரங்களில் உள்ள பலகைகளில் உள்ள படங்களைப் பார்ப்பது, அல்லது ஒரு காதலி காதலனின் படத்தை மறைத்து வைத்துக் கொண்டு தனிமையில் மணிக்கணக்கில் காமக் கண்களால் அதைப் பார்ப்பது, அல்லது இணையத்தின் வழியாக பெண்களின் நிர்வாணப்

படங்களைப் பார்ப்பது, அல்லது குறுந்தகட்டின் மூலம் ஆபாச படங்களைப் பார்ப்பது போன்றவை அனைத்தும் ஹரமாக்கப்பட்டவையாகும்.

சிலர் திருமணத்தின் போது ஆண்கள், பெண்களுடைய கலப்பு கூட்டத்தைப் படமெடுத்து வைத்துக் கொண்டு அவ்வப்போது அவற்றைப் பாரக்கவும் அல்லது பிறருக்குக் காட்டவும் செய்கின்றனர். புகைப்படங்களைப் பார்ப்பது உயிருள்ள ஒருவரைப் பார்ப்பதை விட மிகவும் தீங்கு விளைவிக்கும். வழியில் நடந்து செல்லும் மஹ்ரமல்லாத ஒருவரை புகைப்படங்கள் வழியாக உற்றுப் பார்ப்பது போல் நெருக்கமாகப் பார்க்க முடியாது. எனவே இதில் நீங்கள் அதை விட கவனமாக இருக்க வேண்டும்.

ஒரு துர்சிந்தனை கொண்ட கவிஞர் ஒரு படத்தைப் புகழ்ந்து பேசும்போது கூறியிருக்கிறார்.

*உன் புகைப்படத்தில் உன்னை விட தனித்துவமான ஒன்று உள்ளது.*

*நான் விரும்பும் அளவுக்கு அதை முத்தமிடலாம், அது திட்டவோ அல்லது அதட்டவோ செய்யாது.*

## தீய பார்வையும், அழகை ரசித்தல் என்ற ஏமாற்றமும்

சில அறியாத மக்கள் அழகான வடிவங்களைப் பார்த்து அல்லாஹ்வின் மகத்துவத்தைக் காண்கிறோம் என்று கூறுகிறார்கள். இது வெறும் ஏமாற்று வேலை மற்றும் சைத்தானின் சதியாகும்.

அல்லாஹ் தனது சக்தியின் தலைசிறந்த அடையாளமாக எத்தனையோ அனுமதிக்கத்தக்க மற்றும் ஆகுமான

பல படைப்புகளைப் படைத்திருக்கிறான்?. பூக்களின் வண்ணமயமான வடிவமைப்புகளைப் பாருங்கள், அவற்றின் நேர்த்தி நிலையை உற்று நோக்குங்கள். அவற்றின் நறுமணத்தை முகர்ந்து, அது மனதை எவ்வாறு மகிழ்விக்கிறது என்பதைப் சிந்தியுங்கள். பழங்களின் அமைப்பையும் அவற்றின் சுவையையும் கவனியுங்கள். அவை கனிகொடுக்கும்போது அவற்றின் கனிகளைப் பாருங்கள். ஆறுகள், ஓடைகள் மற்றும் புல்வெளிகளைப் பாருங்கள். பூமியின் பரந்த தன்மையும், வானத்தின் உயர்வும் மனிதனைத் அதைப் பற்றி சிந்திக்க அழைக்கிறது.

சர்வவல்லமையுள்ள அல்லாஹ் கூறிகிறான்:

**ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது, வானம் அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது? மலைகள் எவ்வாறு குவிக்கப்பட்டுள்ளன? பூமி அது எவ்வாறு பரப்பட்டுள்ளது? என்பதை நீங்கள் பார்க்கவில்லையா?**

**நீங்கள் சிந்திக்க விரும்பினால், சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் அழகையும் மகிமையையும் பாருங்கள்?**

**ஆகாயத்தில் பறக்கும் அழகான பறவைகளும், தண்ணீரில் நீந்தும் வண்ணமயமான மீன்களும் சிந்திக்க போதுமானவை அல்லவா!**

**மனித முகங்கள் மட்டுமே பார்க்க எஞ்சியுள்ளனவா?. இந்த சாக்குகள் அனைத்தும் நொண்டியானவை, பாவத்திற்கான சாக்கு பாவத்தை விட மோசமானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

ஒருமுறை, ஒருவரின் அன்பால் கவரப்பட்ட ஒருவர் ஹஜ்ரத் அஷ்ரப் அலி தானவி ﵀ அவர்களிடம் ஹஜ்ரத்,

அல்லாஹ்வின் படைப்பும் சக்தியும் வெளிப்படுவதால் தான் நாங்கள் அழகான முகங்களைக் காண்கிறோம் என்று இதே சாக்குப்போக்கை கூறினார். ஹஜ்ரத் அவர்கள் அவருக்கு அவ்வாறாயின் உன்னைப் போன்ற ஒருவரை அல்லாஹ் எப்படி ஒரு சிறிய துவாரத்தின் வழியாக வெளியாக்கியுள்ளான் என்பதை உன் தாயின் அந்தரங்க உறுப்புகளைப் பார்த்துத் தான் விளங்குவாயா? என்று மிகவும் படிப்பினைக்குரிய பதிலைக் கூறினார்கள்.

## தீய பார்வையின் பீடை

ஹஜ்ரத் உஸ்மான் ﵁ அவர்களுடைய சபைக்கு ஒருவர் வருகை தந்தார். அவர் வரும் வழியில் அந்நியப் பெண்ணைப் பார்த்து விட்டு வந்திருந்தார். ஹஜ்ரத் உஸ்மான் ﵁ அவர்கள் அவருடைய கண்களைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொண்டார்கள். அவர்களுக்கு என்ன ஆயிற்று? அவர்கள் நம்மிடம் வரும் நேரத்தில் அவர்களது கண்களிலிருந்து விபச்சாரத்தின் அருவருப்பு கொட்டிக் கொண்டிருக்கும் நிலையில் வருகிறார்களே! என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட அந்த நபர் ஆச்சரியப்பட்டு, இப்போதும் வஹி தொடர்கிறதா ? என்று கேட்டார். அதற்கு அவர்கள், இல்லை, இது ஒரு முஃமினின் சமிக்கைப் புரிதலாகும் என்றார்கள். ஒரு முஃமினின் இவ்வகையான புரிதலுக்கு அஞ்சுங்கள், ஏனென்றால் அவர் அல்லாஹ்வுடைய ஒளியின் உதவியுடன் பார்க்கிறார் என்றார்கள்.

நுண்ணுணர்வுள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய ஒரு வகையான இருள் தீய பார்வை பார்ப்பவர்களின் கண்களில் உண்டாகிறது என்று மகான்கள் எழுதியுள்ளனர்.

அதே நேரத்தில் கற்பு மற்றும் இறையச்சமுள்ள நபர்களின் கண்கள் ஒரு வகையான பிரகாசமான ஒளியைப் பெற்றுள்ளன என்பதும் சத்தியமானதே.

## தீய பார்வையின் துயரமான முடிவு

ஷேகுல்-ஹதீஸ் ﵀ அவர்கள் கூறுகையில், ஒருவருடைய மரண சமயத்தில், மக்கள் அவரிடம் கலிமா சொல்லும்படி கூறினார்கள். ஆனால் அவர் தனது நாவை அசைக்க முடியவில்லை என்று கூறினார். அதற்கான காரணம் என்ன என்று கேட்கப்பட்ட போது “ஒரு முறை ஒரு பெண் என்னிடம் துண்டு வாங்க வந்திருந்தாள். அவள் மிக அழகாக இருந்தாள். நான் அவளை ஆசைக் கண் கொண்டு பார்த்துக் கொண்டே இருந்தேன்” என்று கூறினார்.

இப்னுல்-ஜவ்ஸி எழுதியுள்ளார்கள் “எகிப்துடைய ஜாமிஆ மஸ்ஜிதில் முஅத்தினாக இருப்பவர் ஒரு நாள் பாங்கு சொல்வதற்காக மினாராவின் மீது ஏறினார். பள்ளிக்கு அருகிலுள்ள வீட்டிற்குள் அவரது பார்வை பட்ட போது அதில் அழகான ஒரு கிறித்தவப் பெண் இருந்தாள். இவ் வீட்டிற்கு புதிதாக வாடகைக்கு வந்துள்ளார்கள் போல் தெரிகிறது பாங்கு சொன்ன பிறகு அறிமுகமாகிக் கொள்ளலாம்” என்று தன் மனதில் பேசிக் கொண்டார்.

பாங்கு சொன்ன பிறகு நேராக அந்த வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார். கதவைத் தட்டிய நேரத்தில் அந்தப் பெண்ணின் தந்தை வெளியே வந்தார். அவருடன் சந்திப்பு ஏற்பட்டது. அவருடன் உரையாடிய போது, அவள் திருமணமாகாதவள் என்பதை அறிந்து கொண்டார். “நான் அவளை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்” என்று அந்த முஅத்தின் அவளுடைய தந்தையிடம் கூறினார்.

எங்கள் மதத்தை ஏற்றுக்கொண்டால், அவளை உனக்குத் திருமணம் முடித்துத் தருகிறேன் என்று அவர் கூறினார். அந்த முஅத்தினுடைய உள்ளம் அப்பெண்ணுடைய அழகில் பித்து பிடித்திருந்த காரணத்தினால் சரி என்று ஒப்புக் கொண்டார். வீட்டின் மேல் மாடிக்கு வா ! இது சம்பந்தமாக விளக்கமாக நாம் பேசலாம் என்று அவர் அவரை அழைத்தார். படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கிய அந்த முஅத்தின் இடையில் கால் இடறி தவறி விழுந்தார். முகம் குப்புற கீழே விழுந்ததால் அவருடைய கழுத்து எலும்புகள் முறிந்து இறந்து விட்டார்.

“*தெய்வமும் கிட்டவில்லை சிலையையும் நெருங்கவில்லை,*

*இங்கேயும் இல்லை அங்கேயும் இல்லை,*”

என்று ஒரு கவிஞர் கூறியதைப் போன்று நிலை மோசமாகி விட்டது.

## தீய பார்வைக்கு குறிப்பிடப்படாத தண்டனை

يَعْلَمُ خَائِنَةَ الْاَعْيُنِ وَمَا تُخْفَي الصُّدُوْرُ

“கண்களின் வஞ்சனையையும், இதயங்களில் மறைத்து வைத்திருப்பதையும் அவன் அறியக்கூடியவன்” என்று அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ளான்.

இந்த வசனத்தில், தீய பார்வை என்பது ஒரு பாவச் செயல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு குறிப்பிட்ட மற்றும் நிலையான தண்டனை எதுவும் கூறப்படவில்லை.

இதில் உள்ள ரகசியம் என்னவென்றால், மக்கள் இரண்டு வகையாக உள்ளனர். ஒன்று உணர்ச்சியற்ற மக்கள்.

அவர்கள் செருப்படிபட்ட பிறகே திருந்தக்கூடியவர்கள். வெறுமனே சொல்வதின் மூலம் அவர்களைத் திருத்த முடியாது.

கண்களின் வஞ்சனையை நாங்கள் அறிவோம், நீங்கள் நிறுத்தவில்லை என்றால், நாங்கள் உங்களை கடுமையாக தண்டிப்போம் என்று அவர்களை மிரட்டுவதற்காக இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கண்களின் திருட்டு மற்றும் உள்ளங்களின் ரகசியங்கள் அனைத்தையும் அறிந்தவனே இதையும் நீ அறிபவனே!

மற்றொரு சாரார் உணர்திறன் மிக்கவர்கள். எங்கள் எஜமானனுக்கு எங்களுடைய செயல்கள் தெரிந்துவிட்டாலே கேவலம் என்று அஞ்சி நடுங்குபவர்கள். எனவே இந்த வசனத்தில் அவன் அனைத்தையும் அறிகிறான் என்ற செய்தியே அவர்களுக்குப் போதுமானது. இதன் மூலமே அவர்கள் வெட்கித் தலைகுணிந்துவிடுவார்கள்.

ஒவ்வொரு நபரும் அவருடைய தீய பார்வைக் கேற்ப மேலே கூறப்பட்ட அவர்களுடைய இயல்பின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள்.

*ஒருவர் எவ்வாறோ ஒருவரை எடுப்பவரும் அவ்வாறே*

*ஆபாசத்தின் அளவே அதிகமாகும் தண்டனை*

என்று ஒரு கவிஞர் கூறியுள்ளார்.

## தீய பார்வை உள்ளத்தில் ஏற்படுத்தும் பாதிப்பு

உள்ளத்தின் பாவங்கள் தீய பார்வையின் மூலமே உருவாகின்றன. பலர் அந்நிய பெண்கள் மற்றும் தாடி முளைக்காத சிறுவர்களை இச்சையுடன் பார்க்கின்றனர்.

இதனால் உள்ளத்தில் அவர்களுடைய உருவம் பதிந்து விடுகிறது. பின்னர் அவர்கள் தனிமையில் அக்காட்சியைப் பற்றி சிந்தித்தல் மற்றும் கற்பனை செய்வதின் மூலம் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதினால் இன்பம் காண்கிறார்கள்.

இந்த இதயத்தின் பாவம் கண்களின் பாவத்தை விட மிகவும் கடுமையானது. ஒரு ஆண் தனது மனைவியுடன் உடலுறவு கொள்ளும் போது தனது கற்பனையில் வேறொரு பெண்ணைப் பற்றி சிந்தித்தால், அவர் விபச்சாரக் குற்றத்தைச் செய்தவரைப் போன்றவராவார் என்று சட்ட வல்லுநர்கள் எழுதியுள்ளார்கள்.

## தீய பார்வையும், ஒளியற்ற முகமும்

தீய பார்வையின் விளைவுகளில் ஒன்று முகம் ஒளியற்றிருப்பதாகும்.

நபி ﷺ அவர்கள், “உங்கள் பார்வையைத் தாழ்த்தி மேலும் உங்களுடைய அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் அல்லாஹ் உங்கள் தோற்றத்தை மாற்றிவிடுவான்” என்று கூறியதாக ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்கள் தோற்றத்தை மாற்றுவதற்கான ஆரம்பம் முகம் ஒளியற்றதாக மாறுவதாகும். அது அழகாக இருந்தாலும், ஒளியற்று இருக்கும்.

## தீய பார்வையைத் தவிர்ப்பதற்கான வெகுமதி

தன்னுடைய பார்வையைப் பாதுகாத்துக் கொள்பவருக்கு மறுமையில் இரண்டு வெகுமதிகள் கிடைக்கும். முதலாவதாக,

அவன் பாதுகாக்கும் ஒவ்வொரு பார்வைக்கும் பகரமாக மறுமையில் அல்லாஹ்வைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்கும்.

இரண்டாவது வெகுமதி என்னவென்றால், அத்தகைய கண்கள் மறுமை நாளில் அழுவதிலிருந்து பாதுகாக்கப்படும்.

நபி ﷺ அவர்கள் கூறிய ஒரு ஹதீஸில் இது குறிப்பிடப்பட்டுள்ளது: “அல்லாஹ் தடைசெய்ததைப் பார்க்காமல் மூடிக் கொண்ட கண்ணும், அல்லாஹ்வின் பாதையில் விழித்திருக்கும் கண்ணும், அல்லாஹ்வின் பயத்தால் அழுத கண்ணையும் தவிர, மறுமை நாளில் மற்ற அனைத்து கண்களும் அழக்கூடியவைகளாகவே இருக்கும். ஈயின் தலைக்கு சமமான அளவு கண்ணீர் வடித்தாலும் சரியே!

## தீய பார்வையில் மிகுந்த எச்சரிக்கை

தீய பார்வை என்ற பாவத்தைத் தவிர்க்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஆண்கள் மஹ்ரமல்லாத பெண்களைப் பார்ப்பதை விட்டும் தவிர்ந்திருப்பது மட்டுமல்ல, மஹ்ரமான பெண்ணைப் பார்ப்பதும் காமத்தைத் தூண்டினால், அவர்களையும் பார்க்கக்கூடாது. இளம் ஆண்களைக் கூடப் பார்க்காதீர்கள். அவ்வாறே ஒரு ஆணின் முகத்தைப் பார்ப்பது பாவ எண்ணத்தைத் தூண்டுமானால், அவரது முகத்தையும் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பெண்களுக்கும் இதே சட்டம் தான். அவர்கள் மஹ்ரமான ஆண்களைத் தவிர வேறு ஆண்களைப்

பார்ப்பது தடைசெய்யப்பட்டது மட்டுமல்லாமல், ஒரு பையன் அல்லது பெண்ணின் முகத்தைப் பார்த்தால் அவர்களின் உள்ளங்களில் மறைந்திருக்கும் காமம் தூண்டப்படுமானால், அவர்கள் அவர்களையும் பார்ப்பதும் தடை செய்யப்பட்டதாகும்.

ஹஜ்ரத் அபூ ஹுரைரா ﵁ அவர்கள் "ஒரு நபர் ஒரு இளம் பையனை வெறித்துப் பார்ப்பதும் கூடாது" என்று கூறுவார்கள்.

"சிறு பையன்களுடன் உட்காராதீர்கள். ஏனெனில் அவர்களின் சோதனை கன்னிப் பெண்களின் சோதனையை விடப் பெரியது" என்று நமது மகான்கள் கூறுவார்கள்.

இதில் உள்ள ஞானம் என்னவென்றால், அந்நியப் பெண்களுடன் உட்காருவதில் பல தடைகள் உள்ளன. ஆனால் ஒரு இளம் பையனுடன் உட்காருவதில் எந்தத் தடையும் இல்லை. எனவே, சோதனையின் பயம் அதிகமாக உள்ளது. இதன் அடிப்படையில், ஒரு பெண் ஒரு ஆணை அடைவதற்கு பல தடைகள் உள்ளன. ஆனால் ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் உட்காருவது எளிது.

எனவே, ஒரு பெண் வேறு பெண்ணுடன் உட்காருவதன் மூலம் தன் உள்ளத்தில் பாவ உணர்வு ஏற்படும் என்ற பயத்தை உணர்ந்தால், அவள் ஆணிடமிருந்து விலகியிருப்பது போலவே அவளிடமிருந்தும் விலகி இருக்க வேண்டும். எந்தளவெனில் அவர்களின் முகங்களைக் கூட பார்க்கக் கூடாது. அவர்களுடன் அதிகம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

*இங்கே ஒவ்வொரு அடியிலும் கவனமாக இருக்க வேண்டும்.*

*இந்த உலகம் ஏதாவது ஒரு சாக்குப்போக்கிற்காகக் காத்திருக்கிறது.*

## தீய பார்வையால் யானை கூட வழுக்கிவிழும்

தீய பார்வையுடைய பழக்கத்திற்கு ஆளான ஒருவரால் தனது அந்தரங்க உறுப்புகளை ஒருபோதும் பாதுகாக்க முடியாது. நீங்கள் வெறுமனே பார்க்கத்தானே செய்கிறீர்கள், வேறெதுவும் செய்யவில்லையே என்று விசித்திரமான முறையில் சைத்தான் அவர்களை ஏமாற்றுவான். ஆனால் பார்ப்பது தானே பாவம் செய்வதின் முதற்படி.

ஒருவர் வெளிப்படையாக யானை போன்ற உறுதியுடன் இருந்தாலும், தீய பார்வையைத் தவிர்க்கவில்லையானால், அவர் நிச்சயமாக ஒரு நாள் நழுவி விழுந்தே தீருவார்.

*எவரது உள்ளத்திற்குள் வருவேனோ, அவர் மட்டுமே ஒளி பெறுவார்.*

*எங்கள் இதயங்களை எரித்து நாங்கள் அதை பொது வெளியில் வைத்து விட்டோம்.*

## தீய பார்வையின் மூன்று பெரிய தீங்குகள்

தீய பார்வை ஒரு நபருக்குள் காம ஆசைகளின் புயலைக் கிளப்புகிறது. இந்த வெள்ளத்தால் அந்த நபர் அடித்துச் செல்லப்படுகிறார். அதனால் மூன்று பெரிய தீங்குகள் ஏற்படுகின்றன.

1. தீய பார்வை ஒரு நபரின் இதயத்தில் ஒரு கற்பனை நேசரை உருவாக்குகிறது. அழகான முகங்கள் அவரது இதயத்தையும் மனதையும் ஆக்கிரமித்து விடுகின்றன. இந்த அழகான வடிவங்களை அடைய முடியாது என்பதை அந்த நபர் நன்கு அறிவார். இருந்தபோதிலும், அவர் தனிமையில் அவற்றை எண்ணிப்பார்ப்பதின் வழியாக ஆனந்தம் அடைகிறார். சில நேரங்களில் அவர் கற்பனை

உலகில் அவர்களுடன் மணிக்கணக்கில் பேசுவார். இவ்விஷயம் இந்தளவு முத்தி விடுகிறது.

*நீங்கள் இறந்தவருக்கு அருகில் இருக்கிறீர்கள்.*

*வேறு யாரும் இல்லாதது போல,*

தீய பார்வையுடன் சேர்ந்து, சைத்தான் ஒருவரின் இதயத்தையும், மனதையும் கைப்பற்றிக் கொள்கிறான். மேலும் அந்த நபரை பல தீய செயல்கள் செய்ய வைக்கிறான். ஒரு வலுவான காற்று ஒரு வெறிச்சோடிய மற்றும் வெற்றிடத்தில் அதன் பாதிப்புகளை ஏற்படுத்துவது போல, சைத்தானும் அந்த நபரின் இதயத்தில் தன் பாதிப்புகளை ஏற்படுத்துகிறான்.

அதனால் அவன் கண்ட தோற்றத்தை அவனுடைய கண்ணிற்கு முன்னால் கொண்டுவந்து மிக அழகாக்கிக் காட்டுவான். இன்னும் அவனுக்கு முன்னால் ஒரு அழகு சிற்பமாகவே காட்டுவான். எனவே அத்தகைய ஒருவரின் இதயம் இரவும் பகலும் இந்த சிலையை வணங்குவதில் ஈடுபட்டுவிடும். இதனால் அவர் முரட்டுத்தனமான ஆசைகள் மற்றும் விருப்பங்களில் சிக்கிக் கொள்வார். இதைத் தான் காமம், ஆசை என்ற பல வார்த்தைகளில் அழைக்கப்படுகிறது.

*சுய வழிபாடு, மாறாக, உருவ வழிபாடு,*

*இது மறைக்கப்பட்ட பலதெய்வ வழிபாடாகும்.*

**அல்லாஹ் கூறுகிறான்**

وَلَا تُطِعْ مَنْ اَغْفَلْنَا قَلْبَهُ عَنْ ذِكْرِنَا وَاتَّبَعَ هَوَاهُ وَكَانَ
اَمْرُهُ فُرُطًا

**“யாருடைய உள்ளத்தை நாம் நமது நினைவை விட்டும் தூரமாக்கிவிட்டோமோ, மேலும் எவர் தனது ஆசைகளைப் பின்பற்றுவாரோ, அவருடைய செயல்கள் வரம்பு மீறிவிட்டன.”**

இந்த கற்பனைக் கடவுள்களை அகற்றாமல், ஈமானின் சுவையை அடையவோ அல்லது இறை நெருக்கத்தின் வாடையையோ உணர முடியாது.

கவிஞரின் கூற்றுப்படி

**சிலைகளை உடைத்தெறி !**

**அது கற்பனையானதென்றாலும் அல்லது கல்லால் ஆனதென்றாலும் சரியே!**

2) தீய பார்வையின் இரண்டாவது தீங்கு என்னவென்றால், ஒரு நபரின், உள்ளமும், சிந்தனையும் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, அவர் தனது சொந்த நலன்களையும், லாபத்தையும் கூட மறந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படுவார்.

வீட்டில் ஒரு அழகான, நல்லொழுக்கமுள்ள மற்றும் அன்பான மனைவி இருந்தாலும் அவனுடைய உள்ளம் அவளின் பால் சாய்வதில்லை. அவருக்கு மனைவியைப் பிடிக்காது. அவர் சிறிய, சாதாரண விஷயங்களுக்கெல்லாம் எரிச்சலடைவார். வீட்டுச் சூழல் அமைதியற்றதாக மாறிவிடும்.

அதே நேரத்தில் இந்த மனிதன் ஒரு வேட்டை நாய் அதன் இரையைப் பார்ப்பது போல, காமக் கண்களால் முக்காடு இல்லாமல் சுற்றித் திரியும் பெண்களைப் பார்க்க ஆரம்பிப்பான். பெரும்பாலும், இது போன்ற நபர்களின் உள்ளம் எந்த வேலையிலும் ஒன்றாது. அவர் ஒரு மாணவராக இருந்தால், படிப்பைத் தவிர மற்ற அனைத்தும் நல்லதாகத் தெரியும்.

அவர் ஒரு தொழிலதிபராக இருந்தால், அவரது உள்ளம் வியாபாரத்தில் சடைவடைந்து அவர் பல மணி நேரம் தூங்குவார். ஆனால் நிம்மதியான தூக்கம் இல்லாமல் அவதியுறுவார். அவரைப் பார்ப்பவர்கள் அவர் தூங்கிக் கொண்டிருப்பதாக எண்ணுவார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர் தனது கற்பனைக் காதலியின் சிந்தனையில் தொலைந்து போயிருப்பார்.

3) தீய பார்வையால் ஏற்படும் மூன்றாவது தீங்கு என்னவென்றால், உள்ளம் உண்மைக்கும் பொய்க்கும், சுன்னத்திற்கும், பித்அத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறிய முடியாமல் போய்விடும். அவனிடமிருந்து நுண்ணறிவாற்றல் பறிக்கப்பட்டுவிடும். மார்க்கக் கல்வி, மற்றும் மெய்ஞானத்தை விட்டும் அவன் விலக்கப்படுகிறான்.

பிறகு அவனுக்கு பாவச் செயல்கள் பாவமாகத் தெரிவதில்லை. அத்தகைய சூழலில், சைத்தான் அவனுக்கு மார்க்கத்தைப் பற்றிய சந்தேகங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்துகிறான். அவனுக்கு நல்லோர்கள் மீது தப்பெண்ணங்கள் ஏற்பட ஆரம்பித்து தீனுடைய தோற்றத்தைக் கொண்ட மக்களைக் கூட வெறுக்கும் நிலைக்குச் சென்றுவிடுவான்.

அவன் பொய்யில் இருந்தாலும் தன்னை சத்தியத்தில் இருப்பதாகக் கருதுவான். இறுதியில், ஈமானை இழந்து, அவன் நரகத்தில் நுழைந்துவிடுவான்.

## தீய பார்வை சம்பந்தமாக முன்னோர்களின் கூற்றுகள்

ஒரு ஹதீஸில் நபி ﷺ அவர்கள் கூறியதாக வந்துள்ளது: தீய பார்வை பார்க்கக்கூடிய ஆணையும், அவ்வாறே

தீய பார்வை பார்க்கக்கூடிய பெண்ணையும் அல்லாஹ் சபித்துள்ளான் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

ஹஜ்ரத் தாவூத் عليه السلام அவர்கள் தனது மகனுக்கு சிங்கம், மற்றும் நாகத்தின் பின்னால் சென்றாலும் கூட பயமில்லை. ஆனால் ஒருபோதும் ஒரு பெண்ணைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்கள். ஏனெனில் ஒரு சிங்கமும், நாகமும் உனக்கு எதிராகத் திரும்பினால், உன் உயிருக்குத் தான் ஆபத்து ஏற்படும். ஆனால் ஒரு பெண் உன் பக்கம் திரும்பினால், நீ நரகத்தின் வாய்க்குள் சென்று விடுவாய்.

ஹஜ்ரத் யஹ்யா இப்னு ஜகரிய்யா عليه السلام அவர்களிடம் விபச்சாரம் எங்கிருந்து தொடங்குகிறது என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “கண்களால்” என்று கூறினார்கள்.

ஹஜ்ரத் உமர் رضي الله عنه அவர்கள், “இரண்டு மக்கிய எலும்புகள் தனிமையில் தனியாக இருந்தாலும், அவை ஒன்றையொன்று தேடும்” என்று கூறினார்கள். மக்கிய எலும்புகள் என்பது ஒரு வயதான ஆணையும், வயதான பெண்ணையும் குறிக்கிறது.

ஹஜ்ரத் சயீத் இப்னுல் முசயீப் رحمه الله அவர்கள் கூறினார்கள், “இளம் சிறுவர்களை நிலைத்துப் பார்க்கக்கூடிய நபரைக் கண்டால், பருப்பில் கறுப்பு நிறத்தில் ஏதோ இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். (அதாவது அவருடைய உள்ளத்தில் சபலம் இருக்கிறது என்று அர்த்தமாகும்)

ஃபதஹ் அல்-மௌசிலி, “அப்தால்கள் என்ற உயர் அந்தஸ்தை அடைந்த ஏறத்தாழ முப்பது மகான்களை நான்

சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவருமே நான் புறப்படும் நேரத்தில் சிறுவர்களின் சகவாசத்தைத் தவிர்க்குமாறு எனக்கு அறிவுறுத்தினரர்கள்.

யாரைப் பார்ப்பதினால் ஒருவருக்குள் சபலம் ஏற்படுமோ அவருக்கு அவ்வகையான ஆண்களைப் பார்ப்பதும் ஹராம் என்று இப்னு ளாஹிர் முகத்திஸி ﵀ கூறினார்கள்.

என்னுடைய சீடர்களுக்கு சிறுவனுடைய சகவாசத்தை நான் பயப்படுவது போல் கீறிக் கிழிக்கக்கூடிய சிங்கம் தாக்கினால் கூட நான் அவ்வளவு பயப்பட மாட்டேன் என்று இமாம் கஜ்ஜாலி ﵀ கூறினார்கள்.

ஹஜ்ரத் மௌலானா கலீல் அஹ்மத் சஹரன்புரி ﵀ அவர்கள் தீய பார்வை என்பது ஞாபக சக்தியை வீணடிக்கும் கொடிய விஷத்தைப் போன்றது என்று கூறுவார்கள்.

ஹஜ்ரத் முஜத்தித் அல்ஃஃபஸானி ﵀ தனது கடிதங்களில், பார்வை கட்டுப்பாட்டில் இல்லாத ஒருவரின் உள்ளம் கட்டுப்பாட்டில் இருக்காது என்றும், உள்ளம் கட்டுப்பாட்டில் இல்லாத ஒருவரின் உறுப்புகள் கட்டுப்பாட்டில் இருக்காது என்றும் எழுதியுள்ளார்கள்.

## தீய பார்வைக்குத் தீர்வு

தற்காலத்தில், இணையம், தொலைக்காட்சி மற்றும் வீடியோ கேமராக்களின் பயன்பாடுகள் சகஜமாகிவிட்டதால் வீடுகள் மற்றும் கூடும் இடங்களில் படங்களும், நாடகங்களும் வழக்கமாகிவிட்டன. மேலும் நிர்வாணம், ஆபாசங்கள் எல்லை மீறிவிட்டன. இளம் பெண்கள் தெருக்களிலும் சந்தைகளிலும் பர்தாயின்றி சுற்றித்

திரிகிறார்கள். விளம்பரம் என்ற பெயரில் சாலைகளின் ஓரங்களில் பெண்களின் கவர்ச்சிகரமான படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன.

செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் கவர்ச்சிகரமான படங்களை அச்சிடுவது ஒரு பொதுவான விஷயமாக மாறிவிட்டது. இதுபோன்ற சூழ்நிலைகளில் பார்வையைப் பாதுகாப்பது இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் ஒரு முடியாத காரியமாக மாறிவிட்டது. எவ்வளவு முயற்சிகள் செய்தாலும், அதிலிருந்து விடுபட எந்த வழியும் தென்படுவதில்லை.

ஆனால் தங்களுடைய உள்ளங்களில் நேர்வழியின் ஒளியைப் பெற்றுள்ளவர்கள் இந்தப் பாவம் நடை பெறும் போது தங்களுக்குள் புழுங்கிக் கொள்கின்றனர். மேலும் ஆன்மீகப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளவர்கள் இந்த நோயிலிருந்து குணமடைய தங்கள் ஆசான்களிடத்திலிருந்து சிகிச்சைக்கான வழிமுறையைத் தேடுகிறார்கள்.

இந்த நோயைக் குணப்படுத்த சில அனுபவப்பூர்வமான வழிமுறைகளை குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து தொகுத்து வழங்குவது அவசியம் என்று தோன்றுகிறது. இதனால் பார்வைகள் தடைசெய்யப்பட்டவற்றிலிருந்து விலகி ஆகுமானதை நோக்கித் திரும்ப வாய்ப்புள்ளது. அவ்வாறே காமத்தின் கொழுந்துவிட்டெரியும் நெருப்பு தணிந்து, கற்பு மற்றும் தூய்மையான வாழ்க்கையை வாழ்வது எளிதாகும்.

## திருக்குர்ஆனுடைய வெளிச்சத்தில்..

புனித குர்ஆனின் வெளிச்சத்தில், தீய பார்வையைத் தவிர்ப்பதற்கு ஏழு வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

1. அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ لِلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ

**“விசுவாசிகளிடம் பார்வையைத் தாழ்த்தச் சொல்லுங்கள்”.**

தீய பார்வைக்கு சிறந்த மருந்து பார்வையைத் தாழ்த்திக் கொள்வதாகும். எனவே ஆன்மீகத் தேடல் கொண்டவர் தெருக்களில், சந்தைகளில் நடக்கும்போது தனது பார்வையைத் தாழ்த்திக் கொள்வதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அவர் நடந்து செல்லும் போது நடைபாதையில் மட்டுமே பார்க்க வேண்டும்.

அவர் வாகனத்தில் சென்றால், மற்ற வாகன ஓட்டிகள் மற்றும் கடந்து செல்லும் பாதசாரிகளை பார்க்கும் அளவுக்கு தனது பார்வையை உயர்த்த வேண்டும். அப்போதும் கடந்து செல்லக்கூடிய எவருடைய முகத்தையும் பார்க்கக்கூடாது. ஏனெனில் இதுவே சோதனையின் ஆரம்பமாகும். அவருக்கு எப்போதாவது பார்வை விஷயத்தில் தவறு நிகழ்ந்தால், உடனே மன்னிப்புத்தேடி, மீண்டும் தனது பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்.

இந்த பழக்கம் அவரது வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறும் வரை தொடர்ந்து இதைப் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். அலுவலக வேலையின் போது அல்லது வாங்கும் மற்றும் விற்கும் சமயத்தில் தேவைக்கேற்ப ஒரு பெண்ணிடம் பேச வேண்டியிருந்தால், அவர் அவளுடைய முகத்தைப் பார்க்கக்கூடாது. கோபக்கார நண்பர்கள் இருவர் ஒருவருக்கொருவர் பேச வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது, அவர்களில் ஒருவர் மற்றவரின் முகம் மற்றும் கண்களைக் கூட பார்க்காமல் எவ்வாறு பேசுவார்களோ அது போன்றே பேச வேண்டும்.

மஹ்ரமல்லாத ஒருவரிடம் நான் அல்லாஹ்வுக்காக வெறுப்பு கொண்டள்ளேன். அதனால் நான் அவருடைய முகத்தைப் பார்க்க மாட்டேன் என்று அவருடைய மனதில் எண்ணிக்கொள்ள வேண்டும்.

2. அல்லாஹ் கூறுகிறான்:

فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِنَ النِّسَاءِ

**“உங்களுக்கு விருப்பமான பெண்களை மணந்து கொள்ளுங்கள்”.**

இறையச்சமுள்ள, கீழ்ப்படியக்கூடிய, அழகுள்ள ஒரு பெண்ணை முடிந்தவரை விரைவாக திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதனால் அவருடைய பாலியல் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

வயிற்றுப் பசியுள்ள ஒரு நபர் நான் நபில் தொழுகை தொழுது என்னுடைய பசியைப் போக்கிக் கொள்ளவேன் என்று கூறினால் அது ஏற்புடையதல்ல. பசி நீங்குவதற்கு உணவு உண்பது தான் முறையான தீர்வாகும். அவர் உணவு உண்டு பிறகு அல்லாஹ்விடம் இதன் மூலம் எனது பசியைப் போக்குவாயாக என்று துஆ செய்தால் இது பொருத்தமான நடைமுறையாகும்.

அவ்வாறே ஒருவரின் பார்வையைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான வழி, திருமணம் செய்து கொண்டு, தனக்குத் தூய பார்வையைத் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதாகும்.

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், தனது மனைவியின் முகத்தை அன்புடன் பார்த்து, இந்த பாக்கியம் கிடைத் திருக்காவிட்டால், எவ்வளவு பிரச்சனை நேர்ந்திருக்கும்

என்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். தெருக்கள், சந்தைகளில் நடந்து செல்லும் பர்தா அணியாத பெண்களை காமப் பார்வையில் மற்றவர்கள் பார்ப்பது போல் தன்னுடைய மனைவியைப் பார்த்து ஆறுதல் பெற வேண்டும்.

தன்னுடைய மனைவியை எப்போதும் சுத்தமாக, நேர்த்தியாக இருக்க அறிவுறுத்த வேண்டும்.அவளுக்கு நல்ல ஆடைகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். மற்ற பெண்களுக்கு என்ன உள்ளதோ அதுவே உம்முடைய மனைவியிடமும் உள்ளது என்பதை மறந்து விடாதீர்.

நான் ஒரு மஹ்ரம் அல்லாதவரைப் பார்த்தால், அல்லாஹ் கோபப்படுவான். மாறாக நான் என்னுடைய மனைவியைப் பார்த்தால் அவன் மகிழ்ச்சியடைவான் என்று உங்கள் நினைவில் கொள்ளுங்கள். ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்து, மனைவி தன் கணவனைப் பார்த்து சிரித்தால் அல்லாஹ் அவ்விருவரையும் கண்டு சிரிக்கிறான் என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

ஹராமின் மீது சற்றும் கவனம் செல்லாத அளவு ஹலாலை முழு மனதுடன் பார்த்து ரசியுங்கள். மனம் மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்க்க விரும்பும் போதெல்லாம், உங்கள் மனைவியின் முகத்தை கற்பனை செய்து பாருங்கள். அப்போது பாவ எண்ணம் உள்ளத்திலிருந்து நீங்கிவிடும்.

3. அல்லாஹ் கூறுகிறான்:

اِنَّ الَّذِيْنَ اتَّقَوْا اِذَا مَسَّهُمْ طَائِفٌ مِنَ الشَّيْطَانِ تَذَكَّرُوْا
فَاِذَا هُمْ مُبْصِرُوْنَ

**“நிச்சயமாக, அல்லாஹ்வை அஞ்சுபவர்கள், சைத்தானின் படைகளால் சூழப்பட்டிருக்கும்போது, அல்லாஹ்வை நினைவு கூறுவார்கள். உடனே அவர்களுக்கு சுதாரிப்பு ஏற்பட்டுவிடும்.”**

சைத்தான் ஒருவரைத் தாக்கி, அவரது இதயத்தில் பாவ சிந்தனையை விதைக்கும் போதெல்லாம், அவர் திக்ரின் மூலம் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற ரகசியத்தை இந்த வசனம் கற்றுக்கொடுக்கிறது.

எனவே, கடைவீதிகள் வழியாகச் செல்லும்போது குறிப்பாக திக்ரு செய்வதில் முக்கியத்துவம் காட்டுங்கள். முடிந்தால், உங்கள் கையில் ஒரு தஸ்பீஹை வைத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில், மனதிற்குள்ளே அல்லாஹ்வை நினைவுகூர்ந்து கொண்டே இருங்கள். திக்ரை விட்டு அலட்சியமாக இருப்பதே பாவத்திற்கான காரணம்.

எனவே திக்ரின் மூலம் அந்த அலட்சியத்தை நீக்குங்கள். அதன் ஒளி படிப்படியாக உள்ளத்தில் ஊடுருவி ஒரு விதமான மகிழ்ச்சியைத் தரும்.அதனால் அவருடைய கண்கள் மற்றவர்களைப் பார்க்க விரும்பாது.

அது இதயத்தை இரண்டு உலகங்களிலிருந்து அந்நியப்படுத்துகிறது.

அறிமுகத்தின் இன்பம் என்பது எப்போதும் ஒரு அற்புதமான விஷயமாகும்.

4. அல்லாஹ் கூறுகிறான்:

اَلَمْ يَعْلَمْ بِاَنَّ اللّٰهَ يَرٰى

**“அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறிய வேண்டாமா?”**

ஒருவருடைய மனம், மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்க்கத் தூண்டினால், அல்லாஹ் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று உடனடியாக எண்ணிக் கொள்ள வேண்டும். அதனால் அவரது பார்வையைக் கட்டுப்படுத்துவது எளிதாகிவிடும்.

ஒரு உதாரணத்தைக் கவனியுங்கள்: ஒரு பெண்ணின் தந்தை அல்லது கணவர் நம்மைப் பார்த்தால், நமது பார்வை அந்தப் பெண்ணின் முகத்தை நோக்கி உயருமா? அந்தப் பெண்ணின் தந்தை அல்லது கணவர் நம் மீது மிகவும் கோபப்படுவார் என்று நாம் தயங்குவோமல்லவா!

அதேபோல், அல்லாஹ் நமக்கு மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்க்கக் கூடாதென்று தடை விதித்துள்ள நிலையில், நாம் அவர்களைப் பார்த்தால், நிச்சயமாக அகில உலகங்களின் இறைவன் ஆத்திரப்படுவான் என்று நாம் நினைக்க வேண்டும். அவன் நம்மைப் பிடித்தால், நமது நிலை என்னவாகும் என்று அஞ்ச வேண்டும்.

5. அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

**“எவர் நம் பாதையில் பாடுபடுகிறாரோ, அவருக்கு நாம் நிச்சயமாக நமது பாதையைக் காண்பிப்போம்.”**

ஷரியத்தைப் பின்பற்றுவதற்காக தன்னுடைய மனதிற்கெதிராக செயல்படுவதற்கே முஜாஹதா என்று கூறப்படும் என விரிவுரையாளர்கள் எழுதியுள்ளனர்.

விடா முயற்சியால் விஷேச கவனம் ஏற்படும் என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும். எனவே மனம் மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்க்கத் தூண்டும் போதெல்லாம் உங்கள் மன உறுதியுடன் அதை எதிர் கொள்ளுங்கள். இந்த முயற்சிக்கு ஈடாக, உண்மையான அன்பாளனான அல்லாஹ்வின் விஷேசப் பார்வை உங்கள் மீது ஏற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோல், இந்த முயற்சி ஒரு சில கணங்களுக்கு மட்டுமே, அதே நேரத்தில் அல்லாஹ்வின் தரிசனத்தின் இன்பம் என்றென்றும் இருக்கக்கூடியதாகும்.

மனதை அடக்குவதின் மூலம் ஏற்படும் ஒளியால் உள்ளம் மிக விரைவாக சுத்திகரிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தஸ்பீஹ் மணிகள் அதனுடன் போட்டியிட முடியாது. தைரியத்தை இழப்பதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்படாது, மாறாக தைரியம் கொள்வதின் மூலமே பிரச்சினை தீர்க்கப்படும்.

எனவே, உங்கள் மனதைக் கட்டாயப்படுத்தி, ஷரியத்துடைய கடிவாளத்தை அதற்கு அணிவித்தால், நியாயத் தீர்ப்பு நாளில் நீங்கள் நற்பாக்கியத்தின் மாலை அணிவிக்கப்படுவீர்கள்.

6. அல்லாஹ் கூறுகிறான்.

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تَؤُدُّوْا الْاَمَانَاتَ اِلَى اَهْلِهَا

**“அமானிதங்களை உரித்தானவர்களிடம் ஒப்படைக்குமாறு அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்.”**

என் கண்கள் அல்லாஹ் வழங்கிய ஒரு அமானிதம் என்பதாக ஒரு இறை நம்பிக்கையாளர் கருது வேண்டும்.

நான் இந்த அமானிதத்தை அல்லாஹ்வின் கட்டளைப்படி பயன்படுத்த வேண்டும். நான் அவ்வாறு செய்யாவிட்டால், நான் அதில் மோசடி செய்தவனாகக் கருதப்படுவேன்.

ஒரு முறை நம்பிக்கைத் துரோகம் செய்த ஒரு நபரிடம் இரண்டாவது முறையாக அமானிதம் ஒப்படைக்கப்படாது என்பது ஒரு பொதுவான நியதியாகும். இதன்படி நான் உலகில் அல்லாஹ் கொடுத்த பார்வை என்ற அமானிதத்தைப் பயன்படுத்தி மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்த்தால் மறுமை நாளில் எனக்கு அப்பார்வை மீண்டும் கொடுக்கப்படாமல் போகிவிடக் கூடாது. அன்று நான் குருடனாக எழுப்பப்பட்டால் என்ன ஆகுமோ? என்று பயப்பட வேண்டும்.

அல்லாஹ் சிலரை மறுமை நாளில் குருடனாக எழுப்புவான் என்று புனித குர்ஆனிலிருந்து நிரூபிக்கப் பட்டுள்ளது. மேலும் அவர்கள், “ஓ இறைவா, நான் பார்வை உள்ளவனாக இருந்த பிறகு என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்?” என்று கேட்பார்கள்.

அல்லாஹ்வின் அன்பிற்குரிய தூதரைப் பார்க்க முடியாத ஒரு காலத்தில் நாம் இந்த உலகில் பிறந்திருக்கிறோம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். மறுமை நாளிலும் நாம் குருடர்களாக்கப்பட்டிருந்தால், அந்த நாளில் அல்லாஹ்வின் அன்புக்குரிய தூதரை சந்திக்கவும் நம்மால் முடியாது. அல்லாஹ் நம் அனைவரையும் இந்த இரட்டை இழப்பிலிருந்து காப்பாற்றுவானாக.

எனவே மறுமை நாளில் இந்த பார்வை என்ற அமானிதம் நமக்கு மீண்டும் கிடைப்பதற்கு நாம் கண்களை சரியாகப் பயன்படுத்துவது முக்கியம். நபி ﷺ அவர்கள்,

“அல்லாஹ் அழகானவன்” என்று கூறினார்கள். இந்தக் கருத்தை மனதில் கொண்டு, நான் உலகில் அழகாகத் தென்படக்கூடியவைகளை தீய எண்ணத்தில் பார்த்தால், மறுமை நாளில் அல்லாஹ்வுடைய அழகைக் காண தடையாக இது அமைந்து விடக் கூடாது என்று நினைத்துப் பாருங்கள்.

7. அல்லாஹ் கூறுகிறான்:

اَلَمْ يَأْنِ لِلَّذِيْنَ اٰمَنُوْا اَنْ تَخْشَعُ قُلُوْبُهُمْ لِذِكْرِ اللّٰهِ وَمَا نَزَلَ مِنَ الْحَقِّ

**“விசுவாசிகள் அல்லாஹ்வின் திக்ரு, மற்றும் அவர்களுக்கு இறங்கிய சத்தியத்தை நினைத்து அவர்களுடைய உள்ளங்கள் அஞ்ச வேண்டிய நேரம் வரவில்லையா?”**

ஒரு நபரின் ஆன்மா தீய பார்வைக்குத் தூண்டும் போதெல்லாம், உடனடியாக அவரது மனதில் விசுவாசிகளுக்கு அவர்களுடைய இதயங்கள் அஞ்ச வேண்டிய நேரம் இன்னும் வரவில்லையா? என்ற இந்த வசனத்தின் அர்த்தத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

அவர் தலை உயர்த்திப் பார்க்க நினைக்கும் போதெல்லாம், விசுவாசிகள் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டிய நேரம் வரவில்லையா? என்று உங்களை நோக்கிக் கூறிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பார்வையிலும் இந்த விஷயத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருங்கள். அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அல்லாஹ் தன்னுடைய அச்சத்தை அருளுவான். தீய பார்வைகளிலிருந்து உண்மையான தவ்பா கிடைக்கும்.

## பரிசுத்தமான ஹதீஸின் வெளிச்சத்தில்..

பார்வைப் பாதுகாப்பு பற்றி நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதனுடைய முகத்தில் இயல்பாகவே பார்க்கத் தூண்டக் கூடிய கவர்ச்சியும், ஈர்ப்பும் உண்டு என்பதைத் தாண்டி நபி ﷺ அவர்கள் விலங்குகளின் அந்தரங்க உறுப்புகளைப் பார்ப்பதைக் கூட தடை செய்துள்ளார்கள் என்றால் இது விஷயத்தில் எவ்வளவு வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

பார்வை சைத்தானின் விஷம் தோய்ந்த அம்புகளில் ஒரு அம்பு என்று கூறினார்கள்.

ஹதீஸ்களை கவனிக்கும் பட்சத்தில் தீய பார்வைக்கு சிகிச்சையளிப்பது குறித்து இரண்டு முக்கியமான ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

நபி ﷺ அவர்கள் "ஒருவர் திடீரென்று மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்த்தால், அவரது அழகும் வசீகரமும் அவருடைய உள்ளத்தில் இடம் பிடித்து விட்டால், உடனே அவர் தன் வீட்டிற்குச் சென்று தன்னுடைய மனைவியுடன் உடலுறவு கொள்ளட்டும். ஏனெனில் மஹ்ரமல்லாத அவளிடம் என்ன இருக்கிறதோ, அதுவே அவனுடைய மனைவியிடமும் இருக்கிறது" என்று கூறினார்கள்.

ஒருவரின் தேவைகளை ஹலாலான முறையில் பூர்த்தி செய்வது ஹராமானதைத் தவிர்ப்பதை எளிதாக்குகிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஒரு இளைஞன் நபி ﷺ அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் நபியே, விபச்சாரம் செய்ய எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டார். அவரைத் திட்டுவதற்குப் பதிலாக, நபி ﷺ அவர்கள் அன்பாக, "உன் தாயுடன் யாராவது விபச்சாரம்

செய்ய விரும்புவாயா?" என்று கேட்டார்கள். அவர், "இல்லை" என்றார். பின்னர் அவர்கள் "உன் மனைவியுடன் யாராவது விபச்சாரம் செய்ய விரும்புவாயா?" என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார், பின்னர் அவர்கள், "உன் சகோதரியுடன் யாராவது விபச்சாரம் செய்ய விரும்புவாயா?" என்று கேட்டார்கள்.

அவர் இல்லை என்றார். பின்னர் அவர்கள், "உன் மகளுடன் யாராவது விபச்சாரம் செய்ய விரும்புவாயா?" என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார். பிறகு நபி ﷺ அவர்கள், "நீ யாருடன் விபச்சாரம் செய்வாயோ அவர்கள் யாரோ ஒருவரின் தாயாக, மனைவியாக, சகோதரியாக அல்லது மகளாகவே தான் இருப்பார்கள். உன்னுடைய மஹ்ரமான பெண்களுடன் ஒருவர் விபச்சாரம் செய்வதை நீ விரும்பாதது போல, மற்றவர்களும் தங்களுடைய மஹ்ரமான பெண்களுடன் யாரும் விபச்சாரம் செய்வதை விரும்புவதில்லை" என்று கூறினார்கள்.

அதன் பிறகு, நபி ﷺ அவர்கள் அவரது நெஞ்சில் கையை வைத்து, அவருடைய கற்பு மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்க துஆ செய்தார்கள். "விபச்சாரம் செய்ய வேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்திலிருந்து முற்றிலுமாக மறைந்துவிட்டது. நான் தற்போது விபச்சாரத்தை வெறுக்குமளவு வேறு எந்த பாவத்தையும் அந்தளவு வெறுப்பதில்லை" என்று கூறினார்.

இவ்வாறு தீய பார்வைக்குப் பழக்கமானவர், "எனது மஹ்ரமான பெண்களை மக்கள் சைத்தானிய பார்வையில் பார்ப்பதை நான் விரும்பாதது போல, மற்றவர்கள் தங்கள் பெண்களை காமக் கண்களால் பார்ப்பதை விரும்பமாட்டார்கள்" என்று எண்ண வேண்டும் என்பதை

இது காட்டுகிறது. இவ்வாறு சிந்தித்தால் அவரது உள்ளம் நிம்மதி மற்றும் அமைதியால் நிரம்பிவிடும். தீய பார்வையின் தூண்டுகோல் பலவீனமடையும். மேலும், அவர் ஒரு சரியான ஷேகிடம் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களுக்கு அவ்வாறான தொடர்பு இருந்தால், இந்த நோயை அவர்களிடம் குறிப்பிட்டு அவர்களின் துஆவையும்,மேற்பார்வையையும் பெற்று இதிலிருந்து நிவாரணம் பெற வேண்டும்.

ஷேகுமார்கள் நபி ﷺ அவர்களின் பிரதிநிதிகளாவார்கள். அவர்களின் விஷேச கவனம் உள்ளங்களின் இருளை அகற்றுகிறது. அதனால் ஒருவர் காம உணர்ச்சியின் தாழ்விலிருந்து எழுந்து ஆன்மீகத்தின் உச்சத்தை அடைவார்.

அவர்களின் தோழமை மருந்தாகும் அவர்களின் பார்வை நிவாரணமாகும்.

## முன்னோர்களின் கூற்றுகளின் வெளிச்சத்தில்...

ஷேகுமார்கள் தங்கள் சீடர்களுக்கும், தங்களுடைய தொடர்பில் உள்ளவர்களுக்கும் தீய பார்வையைத் தவிர்ப்பதற்கான பல்வேறு வழிகளைக் கூறியுள்ளனர். இதை அடிப்படையில் பின்வரும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

### 1. மனதை மாற்றுதல்

ஒரு நபரின் ஆன்மா மஹ்ரமல்லாத ஒருவரைப் பார்க்கத் தூண்டும் போதெல்லாம், ஒரு நபர் தனது கவனத்தை அந்த மஹ்ரமல்லாதவரிடமிருந்து வேறு பக்கம் திருப்ப

வேண்டும். அவர் வேண்டுமென்றே தனது மனதில் ஒரு எண்ணத்தைக் கொண்டு வந்தால், மஹ்ரமல்லாதவரின் எண்ணம் தானாகவே போய்விடும்.

இங்கே சில உதாரணங்கள்: இமாம் கஜ்ஜாலி ﵀ கூறுகிறார்கள்: இதை அறிந்து கொள்ளுங்கள் என் அன்பு நண்பரே, மஹ்ரமல்லாத ஒரு பெண் உனக்கு முன்னால் செல்லும்போது, சைத்தான் அவள் எப்படி இருக்கிறாள் என்று ஒரு முறை பார்த்துக் கொள் என்று தூண்டுவான். அந்த நேரத்தில், ஒருவர் சைத்தானுடன் வாதிட வேண்டும், நான் ஏன் அவளைப் பார்க்க வேண்டும்? அவள் அசிங்கமானவளாக இருந்தால், நான் எந்த பயனுமில்லாத பாவத்தைச் செய்தவனாகிவிடுவேன்.

அவள் அழகானவளாக இருந்தால், தீய பார்வையின் பாவம் எழுதப்படுவதுடன் உள்ளத்தில் இவள் எனக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்ற ஏக்கம் பிறந்துவிடும். ஏனெனில் நான் ஒருகால் இவளை அடைந்து கொண்டாலும், ஆசைப் படும் எல்லாப் பெண்களையும் அடைய முடியாதே. எனவே எவ்விதத்திலும் ஏக்கம் ஏற்படத்தான் செய்யும். இவ்வாறு உள்ளத்தைச் சோர்வடையச் செய்வதால் என்ன பயன்?.

இறுதியாக உள்ளம் எதையும் பார்க்கக்கூடாது, பாவம் செய்யக்கூடாது, மனச்சோர்வடையக்கூடாது என்றே முடிவு செய்யும். ஆக எவ்வகையிலும் மனநிம்மதியை இழப்பது ஒரு அறிவாளிக்கு அழகல்ல.

ஹஜ்ரத் தானவி ﵀ அவர்கள், ஒருவருக்கு அழகான தோற்றத்தைப் பார்த்து ஈர்ப்பு ஏற்பட்டால், அதற்குப் பரிகாரம் என்னவெனில், கறுப்பு நிறமுடைய, பெரியம்மை நோயின் வடுக்கள் உள்ள, கண்குருடான, தலை

வழுக்கையாகவுள்ள, நீண்ட, நீண்ட பற்கள் கொண்ட, அடர்த்தியான உதடுகள் உடைய, மூக்கு ஒழுகக்கூடிய, உதடுகள் தடித்துள்ள, ஈக்கள் அவற்றின் மீது அமர்ந்துள்ள ஒரு தோற்றத்தை உடனடியாக கற்பனை செய்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

அப்போது தான் உள்ளத்தில் ஒரு விதமான வெறுப்பு ஏற்படும். இந்த வெறுப்பு அத்தோற்றத்தைப் பார்த்த பிறகு உள்ளத்தில் உருவான பாலியல் விருப்பத்தை நீக்கிவிடும். சில சமயங்களில் இந்த அழகிய தோற்றமுடையவர் இறந்து மண்ணறைக்குச் செல்லும்போது, அவரது மென்மையான உடல் அழுகி, புழுக்கள் அதனைத் தின்றுவிடும், கடுமையான துர்நாற்றம் வீசும் என்பதைக் கற்பனை செய்வதும் பயனுள்ளதே. அப்படிப்பட்டவளைப் பார்த்து நான் ஏன் என் இறைவனைக் கோபப்படுத்த வேண்டும்? என்று விலகிக் கொள்வார்.

ஒரு மகான் கூறினார்கள் ஏதேனும் அழகான தோற்றத்தின் பால் சிந்தனை சாய்ந்தால், உடனடியாக அவளது முதுமையைக் கற்பனை செய்து பாருங்கள். அவளுடைய முதுகு வளைந்து, அவள் எலும்புக்கூடாக மாறிவிடுவாள். அவளது பார்வை மிகவும் பலவீனமாகி, கேட்கும் திறன் பாதிக்கப்பட்டு விடும். அவளது வாயில் பற்களோ, வயிற்றில் செரிமானமோ இருக்காது.

அவள் உட்கார்ந்த நிலையிலே தன்னையே அறியாமல் சிறுநீர் வெளியேறும். அவளது முகம் உலர்ந்த பேரீச்சம்பழம் போல இருக்கும். எனவே நான் ஏன் அவளைப் பார்த்து அல்லாஹ்வைக் கோபப்படுத்த வேண்டும்?

ஒரு மகான் கூறினார்கள் ஏதேனும் அழகான தோற்றத்தைப் பார்க்க மனம் விரும்பினால், உடனடியாக

என் ஷேக் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். அதனால் உள்ளத்தில் ஒரு வகையான நடுக்கம் ஏற்பட்டு பார்வை விலகிவிடும். இந்த செயலைப் பார்த்தால் என் ஷேக் எவ்வளவு கோபப்படுவார் என்று சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் நிதர்சனமாகவே பார்த்துக் கொண்டிருக்க அவன் எவ்வளவு கோபப்படுவான் என்று சிந்தித்துப் பாருங்கள். உடனடியாக தீய பார்வையிலிருந்து மனந்திருந்த வாய்ப்பு உருவாகும்.

## உ. தனக்குத் தானே தண்டனை கொடுத்தல்

தீய பார்வையைத் தவிர்ப்பதற்கான மற்றொரு வழி, தீய பார்வைப் பார்த்தால் எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கொள்வேன் என்று முடிவு செய்து கொள்வதாகும்.

தீய பார்வையின் இன்பத்தை விட தண்டனையின் வலி அதிகமாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். இதனால், காலப்போக்கில், தீய பார்வையின் பழக்கம் தாமாக நின்று விடும்.

ஹஜ்ரத் தானவி ﵀ அவர்கள் ஒருவர் தீய பார்வைப் பார்த்தால் 20 ரக்அத்கள் நஃபில்கள் தொழுவதை தண்டனையாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இதனால் ஒன்று அல்லது இரண்டு நாட்களில், அவருடைய மனம் தீய பார்வைப் பார்ப்பதை நிறுத்திவிடும். ஏனெனில் ஒரு முறை தீய பார்வை பார்ப்பதினால் அவருக்கு 40 முறை ஸஜ்தா செய்யும் வாய்ப்பு ஏற்பட்டு அவருடைய பாவங்கள் நன்மைகளாக மாறி விடக்கூடாது என்பதாக ஷைத்தான் விரும்புவான். இதனால் வாழ்நாள் முழுவதும் நான் செய்த முயற்சி வீணாகிவிடும் என்றெண்ணி இவரை தீய பார்வையின் பால் இனி தூண்டக்கூடாது என்று முடிவெடுத்து அவரை விட்டு விடுவான் என்று கூறினார்கள்.

ஒரு மகான் கூறினார்கள் உணவு அல்லது பானத்தின் மீது அதீத நாட்டமுள்ள ஒருவர் மூன்று நாட்கள் நோன்பு வைப்பதாக உறுதி கொள்ள வேண்டும். இவ்வாறு பசி மற்றும் தாகத்தில் இருக்கும் போது எல்லா ஆட்டம் பாட்டங்களும் அடங்கிவிடும்.

ஒரு மகான் கூறினார்கள் தீய பார்வையின் பழக்கமுள்ளவர் ஏழையாக இருந்தால், அவர் சிறிது பணத்தை தானமாக வழங்குவதாக உறுதி கொள்ள வேண்டும். அவர் தன்னுடைய தேவைகளைத் தியாகம் செய்து பிறருக்கு பணத்தை தானமாக வழங்கினால் அனைத்து போதையும் நீக்கிவிடும்.

ஒரு மகான் கூறினார்கள் உள்ளத்தில் தீய பார்வையின் ஆசை ஏற்பட்டால் துணியாலான சாட்டையால் முதுகில் பலமுறை அடித்துக் கொள்ளுங்கள். நியாயத்தீர்ப்பு நாளில் மலக்குகள் சாட்டையால் அடித்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறாக, தீய பார்வையின் பழக்கம் சில நாட்களில் முடிவுக்கு வந்து விடும்.

அடியேன் இன்னும் சில முயற்சி செய்து பரிசோதிக்கப்பட்ட அனுபவக் குறிப்புகளை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அவை எனக்கும் மற்றும் என்னுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்த சில அனுபவக் குறிப்புகளாகும். வாசகர்கள் இந்தக் குறிப்புகளை மனதில் வைத்து அவற்றை நடைமுறைப் படுத்திப் பயன்பெற வேண்டும்.

## தீய பார்வை ஏற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பது

தீய பார்வை ஏற்பட வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதே மிகப்பெரிய முன்னெச்சரிக்கை

நடவடிக்கையாகும். திருமணத்தின் போது ஆண் பெண்களுடைய கலப்பு ஏற்படக்கூடிய விதத்தில் கூட்டங்கள் இருந்தால் ஒருபோதும் அதற்குச் செல்லக்கூடாது. ஒரு இடத்திற்குச் செல்ல இரண்டு வழிகள் இருந்தால், தீய பார்வை ஏற்பட வாய்ப்பு மிகக் குறைந்த வழியைக் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏதாவதொரு வீட்டின் கதவைத் தட்டக்கூடிய நேரத்தில் பெண் பிள்ளைகள் கதவைத் திறந்தால் அவர்கள் மீது பார்வை படாத விதத்தில் முன்பக்கத்திலிருந்து விலகி நிற்க வேண்டும்.

விமானம் போன்றவற்றில் பயணம் செய்யும் போது ஆண்கள் இருக்கும் டிக்கெட் கவுண்டருக்குச் செல்ல வேண்டும். இதனால் ஒரு பெண்ணுடன் பேச வாய்ப்பு இல்லாமலாகிவிடும்.

காரில் பயணம் செய்யும் போது, கடந்து செல்லும் வாகனங்களைப் பார்க்கக் கூடாது. ஏனெனில் அதில் பர்தா அணியாத பெண்கள் அமர்ந்திருந்தால், அவர்கள் மீது பார்வை பட்டுவிடும் அபாயமுள்ளது. உங்கள் வீட்டிற்குள் நுழையும்போது கூட கணைப்பதின் மூலம் ஒரு வகையான சப்தம் எழுப்ப வேண்டும். ஏனெனில் அப்போது தான் அந்நியப் பெண் யாராவது வீட்டில் இருந்தால், அவள் தன்னை மூடிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

நீங்கள் பேருந்து, ரயில் மற்றும் விமானப் பயணங்களின் போது ஏதாவது சுவாரஸ்யமான புத்தகத்தை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். அதைப் படிக்க அதிக நேரம் செலவிடுங்கள். நீங்கள் சோர்வடையும் போது, தூங்குங்கள். உங்களுக்கு தூக்கம் வரவில்லை என்றால், முராகபா செய்யும் நோக்கத்துடன் உங்கள் கண்களை மூடி வைத்திருங்கள். ஏனெனில் ஆங்காங்கே அமர்ந்திருக்கக்கூடிய பெண் பயணிகளின் மீது பார்வை படும் அபாயம் உள்ளது.

நடக்கும்போது, அருகில் செல்வோரின் கால்களைப் பார்த்து அவர்கள் ஆண்களா அல்லது பெண்களா என்பதை நீங்கள் அறியும் வகையில் உங்கள் பார்வைகளைத் தாழ்த்தி நடக்கவும். பெண்கள் தங்களை மறைத்துக் கொள்வது மட்டுமல்ல நாமும் அவர்களின் பார்வையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

தவாஃப் செய்யும் போது உங்களின் பார்வைகளை உங்களுடைய கால்களை நோக்கியதாக ஆக்கிக் கொள்ளவும். ஒருபோதும் பார்வைகளை மேலே உயர்த்திப் பார்க்கக் கூடாது. பொது அடுப்பில் பெண்கள் ரொட்டி சுடக்கூடிய இடத்தைக் கடந்து சென்றால் தலை உயர்த்திப் பார்க்க வேண்டாம்.

முதலில் பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா தளங்களுக்குச் செல்ல வேண்டாம். ஒரு வேளை நிர்பந்தமாக நீங்கள் அங்கு செல்ல வேண்டியிருந்தால், கிட்டத்தட்ட ஆட்கள் இல்லாத ஒரு நேரத்தையும், நாளையும் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

நீங்கள் அலுவலகம் அல்லது விமான நிலைய எதிர்பார்ப்பு அறைகளில் அமர நேர்ந்தால் தொலைக்காட்சி ஓடிக்கொண்டிருக்கும் அல்லது பெண்களின் படங்கள் இருக்கும் இடத்தில் வேண்டுமென்றே முதுகைக் காட்டிய வண்ணம் திரும்பி அமருங்கள்.

சாலையின் இருமறுங்கிலுமுள்ள சுவர்களில் ஒட்டப்படும் திரைப்பட சுவரொட்டிகள் அல்லது விளம்பரப் பலகைகளைப் பார்க்க வேண்டாம். மோட்டார் சைக்கிள் அல்லது காரை ஓட்டும்போது உங்கள் முன் செல்லக்கூடிய வாகனத்தில் அமர்ந்திருக்கும் பெண்களைப் பார்க்க வேண்டாம்.

பெண்கள் பள்ளிக்கூடம் அல்லது பெண்கள் கல்லூரி இருக்கும் சாலை அல்லது தெருவில் கடந்து செல்வதைத் தவிர்ப்பது நல்லது. முஸ்லிம் அல்லாதவர்கள் பெரும் பான்மையாக வசிக்கும் நாடுகளுக்குச் சென்றால் அங்குள்ள மக்களின் முகங்களைப் பார்க்காமல் இருப்பது நல்லது. ஏனெனில் கோடை காலங்களில் அவர்களின் உடல்கள் அரை நிர்வாணமாக இருக்கும்.

குளிர்காலத்தில் அவர்களுடைய உடலில் ஆடைகள் இருந்தாலும், பெரும்பாலும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் அதில் எந்த வித்தியாசத்தை கண்டுபிடிக்க இயலாது. பல நேரங்களில் இரு சாராரின் ஆடைகளும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

பெண்கள் கோட், பேண்ட், மற்றும் டை அணிந்து, ஆண்களைப் போல தலைமுடி வெட்டிக் கொள்வார்கள். இந்த சிக்கலைத் தவிர்ப்பதற்கான தீர்வு உங்கள் பார்வையைத் தாழ்த்தி உங்கள் ஈமானைப் பாதுகாத்துக் கொள்வதிலே உள்ளது.

அல்லாஹ்விடம் பணிவுடன் மன்றாடுவதன் மூலம் கோரிக்கை வையுங்கள்.

*யா அல்லாஹ்,*

*துக்கத்தின் நிழல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ள விடாதே.*

*எந்த ஏழையையும் இதயத்தில் ஏழையாக்கி விடாதே.*

*நான் சோதனைக்கு தகுதியானவனல்ல, என் இறைவா!.*

*பாவம் செய்ய எனக்கு வாய்ப்பளிக்காதே.*

உங்கள் மனைவிமார்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள்.

உங்கள் மனைவியிடம் அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொள்ளுங்கள். அவளுடைய உடைகள், உடமைகள் போன்றவற்றில் விஷேச கவனம் செலுத்துங்கள். மனைவி தன் கணவரின் மீது வீட்டிற்குள் அன்பும் பாசமும் காட்டும்போது, மேலும் அவருக்கு சேவை செய்து, புன்னகையுடன் அவரை வரவேற்கும் போது கணவரின் மனம் எந்த அந்நியப் பெண்களிடத்திலும் ஈர்ப்பு கொள்ளாது.

கணவன் மனைவி வீட்டில் தினமும் சண்டையிட்டுக் கொண்டு, இதே கவலையில் கணவர் காலை உணவு சாப்பிடாமல் அலுவலகத்திற்குச் செல்கிறார். அங்கு அவருடைய பெண் பணியாளர் புன்னகைத்து, மிகவும் அனுதாபமான தொனியில், "சார்" எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் போதும் அவளின் புன்னகையும், இந்தக் கேள்வியும் அவனுடைய திருமண வாழ்வில் விஷத்தைக் கலந்துவிடும் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

இவ்வாறான சூழ்நிலையில், அவளுடைய சிரிப்பின் மூலம் இவனுடைய வீடு நாசமடைந்து விடுகிறது. வீட்டிலுள்ள அழகான மனைவி சண்டையிட்டுக் கொண்டே இருக்கும்போது, வெளியே இருக்கும் கருப்பு நிறப்பெண்ணும் தேவதை போலத் தெரிய ஆரம்பிப்பாள். எனவே, கணவன் மனைவி இருவரும் வீட்டில் அன்பும், பாசமும் நிறைந்த சூழலைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதனால் வெளியே இருக்கும் அசுத்தங்களைத் தவிர்ப்பது எளிதாகிவிடும்.

பொதுவாக, மனைவி இல்லாதவர்கள் அல்லது மனைவி இருந்தும் அவளோடு பாலியல் ரீதியாக திருப்தி அடையாதவர்கள் தான் தீய பார்வை பார்த்தல் என்ற

நோயில் பெரும்பாலும் சிக்கியிருப்பார்கள். எனவே தான் திருமணத்தின் நோக்கத்தை “இதன் மூலம் நீங்கள் அவளுடன் அமைதியைக் காணலாம்”என்று புனித குர்ஆன் விளக்கியுள்ளது.

அமைதியான கணவனை தொந்தரவு செய்யும் மனைவி அல்லாஹ்வின் முன் என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதை எண்ணி அஞ்சிக் கொள்ளட்டும். இக்கால இளைஞர்கள் தொலைக்காட்சியில் வரும் பெண்களை பார்க்கும் அதே ஏக்கத்துடன் தனது மனைவியைப் பார்த்தால், அவனது மனைவி சொர்க்கத்தின் தேவதை போலத் தெரிய ஆரம்பிப்பாள்.

சுலைகா தனது அதீத அன்பினால் கண்ணில் தென்பட்ட எல்லாவற்றிற்கும் யூசுப் என்று பெயரிட்டதாகவும், உலகில் யூசுப்பைத் தவிர வேறு எதையும் அவளால் பார்க்க முடியவில்லை என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மனைவிக்கும், கணவனுக்கும் இடையே உண்மையான அன்பு இருந்தால் மஹ்ரமல்லாத எந்த பெண்ணின் தோற்றமும் கணவனுடைய பார்வைக்குத் தென்படாது.

ஆசையிலிருந்து உங்களை நீங்களே விடுவித்துக் கொள்ளுங்கள்.

ஆன்மீகத் தேடல் கொண்டவர் இது போன்ற அற்ப சுகத்தில் ஈடுபட்டு நான் ஒரு போதும் அல்லாஹ்வைக் கோபப்படுத்தமாட்டேன் என்று உள்ளத்தில் அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

மஹ்ரமல்லாத ஒருவரை நோக்கி நான் பார்க்கும் ஒவ்வொரு பார்வையும் என்னை என் உண்மையான நேசனிடமிருந்து தூரமாக்கிவிடும். அதே சமயம்

மஹ்ரமல்லாதவரை பார்ப்பதை விட்டும் நான் தவிர்க்கும் ஒவ்வொரு பார்வையும் என்னை என் உண்மையான நேசனிடம் நெருங்கச் செய்யும் என்று எண்ண வேண்டும்.

எனவே, நான் எனக்காக அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அவன் மீதுள்ள அன்பினால், மஹ்ரமல்லாதவரைப் பார்ப்பதிலிருந்து நான் தவ்பா செய்து விட்டேன் என்றும் உறுதியாக நம்ப வேண்டும்.

இப்போது, பர்தா அணியாத ஏதாவதொரு பெண் என் முன்னால் வந்தாலும் நான் அவளை ஆசைப்பட மாட்டேன். அவள் நீல நிறமாகவோ அல்லது மஞ்சள் நிறமாகவோ, மெலிதாகவோ, அல்லது குண்டாகவோ இருக்கலாம். வெள்ளையாகவோ அல்லது கருப்பாகவோ, சுவன தேவதையாகவோ அல்லது சூனியக்காரியாகவோ கூட இருக்கலாம். மொத்தத்தில் அவள் வேறு ஒருவருக்காக உள்ளவள். எனக்கானவள் அல்ல என்று எண்ண வேண்டும். எனக்கு எந்த தேவையும் இல்லாதபோது வெறுமனே அவளைப் பார்ப்பதால் என்ன பலன்? என்று எண்ண வேண்டும்.

தெருக்கள் மற்றும் சந்தைகள் வழியாகச் செல்லும்போது, மனம் அந்நியப் பெண்ணைப் பார்க்க விரும்பும். அப்போது உடனடியாக உங்கள் மனதில் அவள் மீது எனக்கு எந்த ஆசையும் இல்லை என்று மீண்டும் ஒரு முறை சொல்லிக் கொள்ளுங்கள்.

பேருந்தில் அல்லது காத்திருப்பு அறையில் உங்கள் அருகில் இருக்கும் இருக்கையில் ஒரு ஆண் அமர்ந்திருந்தால் அவரை நீங்கள் கவனிக்கவே மாட்டீர்கள். ஆனால் ஒரு பெண் அமர்ந்தால் உங்கள் மனம் திசைதிருப்பப்பட்டு அவளைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகிறது என்பதை நீங்கள்

நன்கு அறிந்திருப்பீர்கள். மனதில் ஆசை இருப்பதால் தான் இவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் அதுவே அவள் ஒரு வயோதிகப் பெண்ணாக இருந்தாலும் கூட நீங்கள் அவளையும் கண்டு கொள்ள மாட்டீர்கள்.

இது ஆன்மாவில் தீமை இருக்கிறது என்பதற்கான சான்றாகும். எனவே, இந்த ஆசையை உங்கள் உள்ளத்திலிருந்து நிர்பந்தமாக அகற்ற முயற்சி செய்யுங்கள். இரவின் கடைசி நேரத்தில் தஹஜ்ஜுத்திற்குப் பிறகு, அல்லாஹ்விடம்

“யா அல்லாஹ் அந்நிய பெண்களின் ஆசையிலிருந்து என்னை விடுவித்தருள்வாயாக என்று” பிரார்த்தனை செய்யுங்கள். மனிதர்களின் இதயங்கள் யாருடைய விரல்களுக்கிடையில் உள்ளனவோ அப்படிப்பட்ட எஜமானனே அந்நியப் பெண்களின் ஆசையிலிருந்து என் உள்ளத்தைச் சுத்தப்படுத்துவாயாக!. எனக்கு அந்நியப் பெண்ணிற்கும், ஒரு சுவருக்கும் இடையே எந்த வித்தியேசமும் இல்லாத ஆசையற்ற நிலையை ஏற்படுத்துவாயாக என்று கேளுங்கள். அதனுடைய பரக்கத்துகள் சில நாட்களில் வெளிப்படும். ஆனால் சோதனைக்கு உட்படுத்தப்படுதல் என்பது அவசிய நிபந்தனையாகும்.

## சுவன மங்கையர்களின் குணங்களை கற்பனை செய்து பாருங்கள்

எப்போதாவது மனம் ஒரு மஹ்ரம் அல்லாத அந்நியப் பெண்ணைப் பார்க்க விரும்பினால், ஆன்மீகத் தேடல் கொண்டவர் தனது உள்ளத்தில் ஒரு சுவன மங்கையின் குணங்களை கற்பனை செய்து கொள்ள வேண்டும்:

உதாரணமாக,

- கூடாரத்தில் தங்கியிருக்கும் கன்னியர்கள்.
- (வெட்கத்தால்) கீழே பார்ப்பவர்கள்.
- எந்த ஆணோ, ஜின்களோ அவர்களை தீண்டியதில்லை.
- முழுக்க பரிசுத்தமான பெண்களாவர்.
- மாணிக்கங்கள் மற்றும் முத்துக்களைப் போன்றவர்கள்.

இந்த எல்லா தன்மைகளையும் மனதில் கொண்டு, அந்நியப் பெண்களை சற்று இத்துடன் ஒப்பிட்டு சிந்தித்துப் பாருங்கள்: அவளுக்கு பெரும்பாலும் மாதவிடாயின் போது நாற்றமான இரத்தம் வெளியாகிறது.

சில நேரங்களில் பிரசவத்திற்குப் பிந்தைய இரத்தப் போக்கின் இரத்தம் வெளியாகிறது. ஒரு நாளைக்கு பல முறை, சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதினால் வயிற்றிலிருந்து கழிவுகள் வெளியேறுகிறது. அவள் தினந்தோறும் மூக்கை சுத்தம் செய்க்கூடியவள். அவளுக்கு வாயிலிருந்து சளி வெளியேறும். அக்குள்களிலிருந்து வியர்வை வீச்சம் வீசும். தலையில் பேன்கள் தொற்றிக்கொள்ளும். சில நாட்கள் குளிக்கவில்லையானால், அவளது உடலிலிருந்து துர்நாற்றம் வீசும். அவள் பல் துலக்கவில்லையானால், அவளது வாயிலிருந்து துர்நாற்றம் வீசும்.

அவள் நோய்வாய்ப்பட்டால், சில நாட்களில் மெலிந்துவிடுவாள். அவள் வயோதிகமடைந்தால், அவளுடைய முகம் உலர்ந்த பேரீச்சம்பழம் போன்று காய்ந்து விடும். அவளுடைய வாயில் பற்கள் இருக்காது. அவளுக்கு செரிமானம் ஏற்படாது.அவளுக்கு கூன்

விழுந்துவிடும். வாயிலிருந்து வார்த்தைகள் முழுமையாக வராது. அவள் தனது அந்தரங்க உறுப்புகளின் முடியை சுத்தம் செய்யாவிட்டால், காடு போன்றாகிவிடும். அவள் எப்போதும் வயிற்றில் மலம் மற்றும் சிறுநீரின் கழிவுகளைச் சுமக்கக்கூடியவள்.

இது போன்ற அற்பமான தன்மை கொண்ட ஒரு பெண்ணைப் பார்த்து என் இறைவனை நான் கோபப்படுத்த வேண்டுமா ! சுவனம் மற்றும் அங்குள்ள மங்கையர்களின் பாக்கியத்தை இழக்க வேண்டுமா!

அந்த சுவன மங்கையோ எப்போதும் கன்னியாகவே இருப்பாள். அவள் முத்துக்களைப் போல பிரகாசிப்பவள். அவள் உடலின் ஒவ்வொரு பகுதியும் நறு மணம் கொண்டதாக இருக்கும். அவள் தூய்மையானவளாக இருப்பாள். அவளுடைய உமிழ்நீரை உப்பு நீரில் கலந்தால், அது இனிமையாக மாறும். அவள் சிம்மாசனத்திலிருந்து தன் விரலை கீழே எடுத்தால், அது சூரியனின் ஒளியைப் போல பிரகாசிக்கும். அவள் சிரித்து பேசினால், இறந்தவர்கள் கூட உயிர் பெறுவார்கள். வேறு யாரும் தொடாத மங்கையாவாள்.

அவளுடைய இதயத்திலிருந்து கொப்பளிக்கும் நேச அலைகளை ஒரு நபர் தன்னுடைய கண்களால் பார்ப்பார். அவளுக்கு நோயோ, பலகீனமோ ஏற்படாது. மாளிகையின் உப்பரிகையில் அமர்ந்தவாறு தன் கணவனுக்காகக் காத்திருப்பாள்.

நான் மஹ்ரம் அல்லாத ஒரு பெண்ணைப் பார்த்ததின் விளைவாக இவ்வளவு உண்மையுள்ள, அழகான மற்றும் அடக்கமான மனைவியை இழக்க வேண்டுமா? இதில் அறிவுடைமை எங்கே?

எனவே இந்த உலகில், என் மனைவி மட்டுமே எனக்கானவள். மறுமையில், எனக்கு இன்னும் சுவனக்கன்னியர்கள் உள்ளார்கள். எனவே தெரு சந்தைகளில் நடக்கும் பெண்கள் மீது எனக்கு எந்த விருப்பமும் இல்லை. எனவே நான் ஹராமான ஒவ்வொரு பார்வையையும் நான் தவிர்த்துக் கொள்வேன். நான் என் இறைவனை மட்டும் திருப்திப்படுத்துவேன். இதனால் நான் சுவன மங்கையர்களை அடையத் தகுதியானவனாக மாறுவேன் என்று உறுதி எடுக்க வேண்டும்.

## அல்லாஹ்வின் தரிசனம் கிடைக்காது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்

ஒரு ஹதீஸின் பொருள் என்னவென்றால், சுவனவாசிகள் அல்லாஹ்வைப் பார்க்கும் பாக்கியம் பெறுவார்கள். சிலர் ஒரு முறையும், சிலர் ஆண்டுக்கொரு முறையும், சிலர் மாதம் ஒரு முறையும், சிலர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், சிலர் ஒவ்வொரு நாளும் அந்த பாக்கியத்தைப் பெறுவார்கள். இத்தகைய சூழலில், இந்த உலகில் பார்வையற்றவராகப் பிறந்து, நன்மைகள் பல செய்து, இறையச்சம், பொறுமை மற்றும் நன்றியுணர்வு நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர் எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வைப் பார்த்துக் கொண்டே இருப்பதின் மகிழ்ச்சியைப் பெறுவார்.

அவர் இந்த உலகில் வேறு யாரையும் ஆசைக் கண் கொண்டு பார்க்கவில்லை என்ற காரணத்தினால் இப்பாக்கியத்தை அல்லாஹ் அவருக்குத் தருவான். இப்போது அவர் விரும்பும் போதெல்லாம் என் திருமுகத்தின் ஒளியை அவர் காணட்டும் என்று அவரிடம் அல்லாஹ் கூறுவான்.

அல்லாஹ்வின் திருப்திக்காக இந்த உலகில் அந்நியப் பெண்களைப் பார்ப்பதிலிருந்து விலகி இருந்தவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் அவன் தவிர்த்த ஒவ்வொரு பார்வைக்கும் பகரமாக தனது முகத்தின் ஒளியைக் காட்டுவான் என்று சில அறிஞர்கள் எழுதியுள்ளனர்.

எனவே ஆன்மீகத் தேடல் கொண்டவர் இந்த விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். “ஒரு சில வினாடி தீய பார்வையால் மறுமையில் கிடைக்க இருக்கும் பெரும் பாக்கியமான அல்லாஹ்வின் தரிசனத்தை நான் ஏன் இழக்க வேண்டும்” என்பதாக தன் மனதிற்கு புரிய வைக்க வேண்டும்.

இப்னு கய்யூம் ﵀ அவர்கள் “நாம் உலகில் செய்த செயலை ஒத்த அமைப்பிலேயே சுவனத்தில் நமக்கு கூலி வழங்கப்படும்” என்று கூறியுள்ளார்கள். எனவே, அந்நியப் பெண்ணின் முகத்தைப் பார்க்காமல் தன் பார்வையைத் திருப்பிக் கொள்பவருக்கு அல்லாஹ் தன் முகத்தைப் பார்க்க வாய்ப்பளிப்பான்.

எனவே ஆன்மீகத் தேடல் கொண்டவர் அந்நியப் பெண்ணைப் பார்க்காமல் தனது பார்வையைத் திருப்பி, அல்லாஹ்வுடைய தரிசனத்தைப் பெறத் தகுதியுடையவராக மாற வேண்டும்.

## உங்கள் தாயையும், மகள்களையும் கற்பனை செய்து பாருங்கள்

ஒருவருடைய மனம், அந்நியப் பெண்ணை காமப் பார்வையால் பார்க்கத் தூண்டினால், அவர் உடனடியாக தனது தாயையோ அல்லது மகளையோ தனது உள்ளத்தில் கற்பனை செய்து அவர்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்க

வேண்டும். இவை மிகவும் புனிதமான உறவுகள், தண்ணீரை ஊற்றுவது நெருப்பின் சுடரை அணைப்பது போலவே காம சிந்தனைகள் இதனால் அணைக்கப்படுகின்றன.

இருப்பினும், இந்த செயல் நல்லொழுக்கமுள்ள மற்றும் மார்க்கத்தை மதிப்பவர்களுக்கே மிகவும் பயனளிக்கும்.

## கண்களில் சூடு போடப்படுவதை கற்பனை செய்து பாருங்கள்

தீய பார்வை பார்த்தவன் நரகத்தை அடையும்போது, மலக்குகள் அவனுடைய கண்களில் உருக்கிய ஈயத்தை ஊற்றுவார்கள் என்று அறிஞர்கள் எழுதியுள்ளனர். சில புத்தகங்களில் இரும்பு கம்பிகள் சூடாக்கப்பட்டு அவனுடைய கண்களில் திணிக்கப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஆன்மீகத் தேடல் கொண்டவரின் மனம் அவரை தீய பார்வைப் பார்க்கத் தூண்டும் போது, தற்காலிக இந்த அற்ப இன்பத்திற்காக என் கண்களில் பழுக்கக் காய்ச்சப்பட்ட கம்பி சொருகப்பட்டால் என்ன ஆகுமோ என்று சிந்திக்க வேண்டும். சில நாட்கள் தொடர்ந்து இதை சிந்திப்பதின் மூலம், மனதில் மறைந்துள்ள தீய சிந்தனை நீங்கிவிடும்.

## அடிப்படையான, அவசியமான விஷயம்

நீண்ட காலமாக தீய பார்வையின் பழக்கம் கொண்டவர்கள், மேலும் மேலே கூறப்பட்டுள்ள இந்த ஆரம்பகட்ட வழிமுறைகளிலிருந்து தங்கள் பிடிவாதத்தை விடமுடியாதவர்கள், அல்லாஹ்விடம் ஒரு விதிமுறை உள்ளது என்பதை தன் மனதிற்கு புரிய வைக்க வேண்டும்.

ஒருவர் ஏதாவது பாவத்தைச் செய்யத் தொடங்கினால், எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய மேலான பொறுமை மேலும் சகிப்புத்தன்மையால் ஆரம்பமாக அவன் திருந்திவிடுவான் என்று அவனைக் கண்டு கொள்ளாமல் விடுவான்.

அவன் பின்வாங்கவில்லை என்றால், சில காலம் குற்றங்களை மறைத்தல் என்ற தன்மையுடன் அனுகுவான். அவன் இன்னும் முன்னேறினால், அவனைத் தண்டிக்க எண்ணுவான்.

மேலும், அவன் தண்டிக்க விரும்பும் துரதிர்ஷ்டவசமான நபரை படாத பாடு படுத்திவிடுவான்.இறுதியாக அவனை வீட்டில் உட்கார வைத்தே அவமானப்படுத்துவான். மற்றவர்களுக்கு அவனை ஒரு தண்டனைக்கான அடையாளமாக ஆக்கிவிடுவான்.

எனவே, நான் நீண்ட காலமாக தீய பார்வைப் பார்த்தல் என்ற பாவத்தைச் செய்து வருகிறேன். இதுவரை, அல்லாஹ் என்னுடைய குற்றங்களை மறைத்தல் என்ற தன்மையின் மூலமே பாதுகாத்துக் கொண்டிருக்கிறான்.ஒருகால் அவன் என்னை தண்டிக்க நினைத்தால், நான் உலகில் அழிந்து போவது மட்டுமல்ல. அடையாளமற்றவனாக தொலைந்து போய்விடுவேன் என்றும் அஞ்ச வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்:

**அல்லாஹ் யாரை அவமானப்படுத்துகிறானோ, அவனை மதிக்க யாரும் இருக்கமாட்டார். இந்த வசனத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தால், ஒருவர் தீய பார்வையின் பழக்கத்திலிருந்து விடுபட ஏதுவாக இருக்கும்.**

## உங்கள் மனதோடு விவாதம் செய்யுங்கள்

ஒருவரின் மனம் தீய பார்வை பார்க்கத் தூண்டினால், நீங்கள் உங்கள் மனதுடன் இவ்வாறு விவாதிக்க வேண்டும்:

- ஓ மனமே, உன் புகழ் எங்கோ உயர்ந்துள்ளது. ஆனால் உன் செயல்களோ இவ்வளவு தரங்கெட்டுள்ளதே.
- படைப்பினங்களின் பார்வையில் நீ அல்லாஹ்வின் நண்பன், ஆனால் அல்லாஹ்வுடைய எதிரிகளின் செயல்களையே நீ ஆர்வமாகச் செய்கிறாய்.
- வெளியில் நீ ஒரு விசுவாசி, ஆனால் உள்ளே நீ ஒரு பாவி.
- நீ மேம்போக்காகப் பார்த்தால் லா இலாஹ என்று கூறியவன், அந்தரங்கத்தில் நீ ஒரு அகம்பாவம் கொண்டவன்.
- நீ வெளியில் அல்லாஹ்வின் அடியான். ஆனால் தனிமையில் சைத்தானின் அடிவருடி.
- உன் நாவு அல்லாஹ்வைத் துதிக்கிறது, உன்னுடைய கண்கள் அழகான பெண்ணைக் காண ஏங்குகிறது.
- நீ படைப்பினங்களின் பார்வையில் ஒரு சூஃபி, ஆனால் படைப்பாளனனின் பார்வையில் நீ ஒரு பாவி.
- உன் புறத்தோற்றத்தை நீ சுன்னாவால் அலங்கரித்துள்ளாய். ஆனால் உன் உள்ளத்தை நீ காமத்தால் நிரப்பியுள்ளாய்.
- உன் செயல்கள் படைப்பினங்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுள்ளன. ஆனால்

அவை படைப்பாளனின் கண்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றன.

- நீ வெளிப்படையில் சொர்க்கத்தைத் தேடுகிறாய். ஆனால் உண்மையில் நீ நரகத்தை வாங்கிக் கொண்டிருக்கிறாய்.
- தயவு செய்து நீ உன்னுடைய நஷ்ட வர்த்தகத்தை உடனடியாக நிருத்திவிடு. அதிலிருந்து பின்வாங்குவதே உனக்கு நலம்.

அல்லாஹ் உனக்காக தவாபாவின் கதவைத் திறந்து வைத்திருக்கிறான். ஒருவேளை இது உன்னுடைய கடைசி அவகாசமாக இருக்கலாம். இதற்குப் பிறகு வருத்தப்படுவதால் என்ன பயன்? இது போல சில முறை மனதோடு விவாதம் செய்வதன் மூலம், தீய பார்வை கணிசமாகக் குறையும்.

## அல்லாஹ் உடன் இருக்கிறான் என்று கவனித்தல்

ஒருவரின் ஆன்மா தீய பார்வைகளிலிருந்து விலகாதபோது, ஆன்மீகத் தேடல் கொண்டவர் இறை சிந்தனையை தன் மனக்கண் முன் கொண்டு வருவதற்கு ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் சில வினாடிகள் தனது உள்ளத்தில் பின்வரும் வசனத்தின் பொருளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

**“நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான்”.**

பின்னர் நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ்வின் பார்வையிலிருந்து மறைய முடியாது என்பதை உங்கள்

ஆன்மாவிற்கு விளக்குங்கள். நீங்கள் மஹ்ரம் அல்லாதவரைப் பார்க்கும்போது, அல்லாஹ் உங்களைப் பார்க்கிறான். அவன் உங்களை உடனுக்குடன் பிடிக்கவில்லை என்பது அவனுடைய கருணையாகும்.

நீங்கள் இதைத் தொடர்ந்து செய்தால், எவ்வளவு காலம் தான் இதை சகிக்க முடியும்.இந்த தீய பார்வை என்ற அம்பு உங்களை ஆன்மீக ரீதியாக இறக்கச் செய்து விடும். தவறுக்கான வெகுமதி கிடைப்பதென்னவோ உண்மை தானே. நீங்கள் மஹ்ரம் அல்லாதவரை காமக் கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தால் யாராவது உங்கள் பெண்களை நிச்சயம் அத்தகைய பார்வையால் பார்க்கத் தொடங்குவார்கள்.

*ஓ ஆன்மாவே ! நன்கு விளங்கிக் கொள்.*

*நீ எதைச் செய்வாயோ அதையே அனுபவிப்பாய்.*

*நீ இதை நம்பவில்லை என்றால், ஒரு முறை செய்து தான் பார்.*

*சொர்க்கமும் உண்மை, நரகமும் உண்மை.*

*நீ நம்பவில்லை என்றால், ஒரு முறை இறந்து தான் பார்.*

இன்ஷா அல்லாஹ், இவ்வாறான சிந்தனையை கொண்டு வருவதன் மூலம் அல்லாஹ்வின் கருணை உங்களுக்குக் கிடைக்கும். மேலும் தீய பார்வையிலிருந்து தவ்பா செய்யும் திறனைப் பெறுவீர்கள்.

## ஒரு தவறான புரிதல்

சில இளைஞர்கள் அந்நிய பெண்களைப் பார்க்கும் சிந்தனை தனக்குள் அறவே ஏற்படக்கூடாது என்று எண்ணுகின்றனர். இவ்வாறான நிலையை எட்ட

முடியவில்லையானால் அவர்கள் மிகவும் வருத்தமடைந்து, நமது திக்ரும், முராகபாவும் பயனற்றதாக விட்டது என்று எண்ணுகிறார்கள்.

நினைவில் கொள்ளுங்கள், இது ஒரு சைத்தானிய ஊசலாட்டம் ஆகும். நம்முடைய உள்ளங்களில் தீய பார்வைக்கான ஆசை இல்லை என்றால், அதைத் தவிர்ப்பதில் என்ன துணிச்சல் உள்ளது. ஒரு பார்வையற்றவன் நான் அந்நியப்பெண்களைப் பார்ப்பதில்லை என்று கூறினால், அதில் பெருமைப்பட என்ன உள்ளது? தீவிர ஆசை இருந்தபோதிலும் தீய பார்வையைத் தவிர்ப்பதிலே தான் தீராத இன்பம் உள்ளது.

எனவே இது போன்ற சந்தர்ப்பத்தில் மனதில் வருத்தமும், கவலையும் உருவாகுவதும், மஹ்ரம் அல்லாதவரைப் பார்ப்பதை விட்டும் தவிர்ந்திருக்க முயல்வதும் மிகப் பெரிய ஜிஹாத் ஆகும்.

இதெல்லாம் வாழ்நாள் முழுவதும் செய்யப்பட வேண்டும். அத்தோடு ஒருவர் தனது குறைகளை எண்ணி அழ வேண்டும். இதே நிலையில் ஒருவர் இறக்கும் போது, அவருடைய மண்ணறையில் அமைதியான, நிம்மதியான தூக்கத்தைப் பெறுவார்.

முன்கர், நகிர் என்ற மலக்குகள் தங்களுக்குள் இப்படித்தான் பேசிக் கொள்வார்கள்.

மீருடைய தலைமாட்டில் மெதுவாகப் பேசுங்கள்.

அவர் இதுவரை அழுது கொண்டே இப்போது தான் தூங்கியுள்ளார்.

## குறிப்புகள்:-